# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜூலை 19 2019. இதழ் - 71










**படுவான்கரை மீது ஏன் பாராமுகம்?**

பக்கம் - 03



**கிழக்கு மக்களின் தேர்வு எது?**

தமிழர்களின் ஏகபோக அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக்...

பக்கம் - 04



**புத்த பிக்குவாக மேடையில் தோன்றிய தோப்பூர் ஹயாத்து மூமீன்**

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்கு ஒரு தொலைபேசி...

பக்கம் -11



**கிரிக்கட்டின் தாயகத்தின் 44 வருட தாகம் தீர்ந்தது. விறுவிறுப்பான இறுதிப் போட்டியுடன் விடை பெற்ற உலகக் கிண்ணம்**

பக்கம் - 12


## கன்னியா விவகாரம்: 'மைத்திரியுடனான கலந்துரையாடலில் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் எவருமே பங்கேற்கவில்லை'





நி.அமர்தலஸன்

'திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் புத்ததாது கோபுரம் ஒன்றைக் கட்டுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் உறுப்பினர்கள் எவரும் அதில் கலந்துகொள்ளவில்லை' என்றும் கூட்டமைப்பில் இருந்து விலகிச் செயற்படும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மாத்திரமே கலந்துகொண்டதாகவும் அமைச்சர் மனோ கணேசன் கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறினார்.

வியாழக்கிழமை முற்பகல் மைத்திரிபால சிறிசேனவுடன் சந்திப்பு இடம்பெறுமென அமைச்சர் மனோ கணேசன் ஏலவே அறிவித்திருந்தார். ஆனால் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் கூட்டத்தில் பங்கொள்ளவில்லை.

ஆனாலும் இலங்கைத் தொல்பொருள் ஆய்வுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட அரச அதிகாரிகள் கூட்டத்தில் பங்குகொண்டனர். தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தில் சிங்கள அதிகாரிகள் மாத்திரமே செயற்படுவதாகவும் தமிழ் சைவப் பண்பாடுகளையும் பாதுகாக்க வேண்டுமெனவும் அமைச்சர் மனோ கணேசன் மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுள்ளார்.

கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்திற்குள் சைவத் தமிழர்கள் செல்வதற்கு தொல்பொருள் ஆராட்சித் திணைக்களம் தடை விதிக்க முடியாதென்றும் எதிர்வரும் காலங்களில் தமிழ் தொல்லியல் வரலாற்று ஆய்வாளர்களின் அனுமதியும் பெற்றே வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் தொல்பொருள்

தொடர்ச்சி பக்கம்... 15

## ஆலயங்களில் மிருக பலியைத் தடை செய்யும் உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீக்கியது



இந்து ஆலயங்களில் மிருக பலி செய்வதற்கு யாழ் மேல் நீதிமன்றம் விதித்திருந்த தடையை இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீக்கியுள்ளது.

யாழ்ப்பாண ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலியிட்டு வேள்வி நடத்தப்படுகிறது. அதற்கான அனுமதியை தடை செய்ய வேண்டும்" எனக் கோரி சைவ மகா சபையினர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

ஒன்றரை வருடங்கள் விசாரணையிலிருந்த இந்த வழக்குக்கு 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதி இறுதித் தீர்ப்பை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழங்கினார். கோயில்களில் மிருகபலிக்கு அவர் தடை விதித்திருந்தார்.

இந்தத் தடை உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்தும் வேள்வியின் பண்பாட்டுத் தேவையை வலியுறுத்தியும் மேன்முறையீட்டு நீதிமன்றில்


தொடர்ச்சி பக்கம்... 15

## ஜப்பானில் அமிலத்தாக்குதல் என சந்தேகிக்கப்படும் சம்பவத்தில் 23 பேர் பலி



ஜப்பான் நாட்டில் கியோட்டோ மாகாணத்தில் உள்ள ஒரு ஸ்டூடியோவில் அமில வீச்சுச் தாக்குதல் என்று சந்தேகிக்கப்படும் சம்பவத்தில் சுமார் 23 பேர் பலியாகியதாக ஜப்பானிய

தொடர்ச்சி பக்கம்... 15

## கல்முனையில் புதியகணக்காளர் இன்னும் பொறுப்பேற்கவில்லை!

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை வடக்கு உப பிரதேசசெயலகத்தில் புதியகணக்காளர் (18) வியாழக்கிழமை பதவியேற்பார் எனக்கூறப்பட்டிருந்தபோதிலும் அவர் வியாழன் பிற்பகல் 1.00மணிவரை அங்கு வந்துசேரவில்லை.

புதிய கணக்காளரை நியமிப்பதற்காக பொதுநிருவாக அமைச்சிலிருந்து வரவேண்டிய நியமனக் கட்டளைக்கடிதம் அம்பாறை கச்சேரிக்கு (மாவட்டசெயலகம்) இன்னும் வந்து சேரவில்லை என அங்குள்ள உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

'கடிதம் கிடைக்கப்பெற்றதும் அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம். அதுவரை எம்மால் ஒன்றும் செய்யமுடியாது' என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் கணக்காளர் பதவியேற்பு என்பது ஓரிரு நாட்கள் தாமதமாகலாம் எனக்கூறப்படுகிறது.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெற்றிக்கிண்ணம் - 2019

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெற்றிக்கிண்ணம் - 2019 கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள மத்திய மற்றும் மாகாண நிருவாகத்தின் கீழ்வரும் ஏழு ஆதார வைத்தியசாலைகளில் இருந்து தலா ஒரு அணி வீதமும் பிராந்திய பணிமனை சார்பாக ஒரு அணியுமாக மொத்தம் எட்டு அணிகள் பங்குபற்றவுள்ளன.

போட்டிகள் 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.
எட்டு அணிகளும் தலா நான்கு அணிகள் வீதம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நொக்கவுட் முறையில் போட்டிகள் நடைபெறும்.

## மாவடி கந்தசுவாமி ஆலயத்தின் தீர்தோற்சவ பவனி!





(படங்கள் காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆடிவேல்விழா தீர்த்தோற்சவத்திற்கான தேரோடும் வீதியலான பாரம்பரிய கலாசார ஊர்வலம் (18) வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

## பிரபல கஞ்சா முகவரும் சிக்கினார்!

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை மதுவரி இலாகாவினால் நிந்தவூரில் இடம்பெற்ற தேடுதல் வேட்டையில் ஹெரோயின் மற்றும் கஞ்சா வைத்திருந்த அறுவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் பிரபல கஞ்சா முகவரொருவரும் அடங்குவதாக கல்முனை மதுவரி பிரதான பரிசோதகர் சதங்கராஜா தெரிவித்தார்.

போதை ஒழிப்பு வாரத்தில் கிழக்குமாண உதவி ஆணையாளர் எ.கே. ரணவீர அவர்களின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட அத்தியட்சகர் என். சுதாகரனின் தலைமையில் கல்முனை மதுவரி பிரதான பரிசோதகர் சதங்கராஜா தலைமையில் நிந்தவூர் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் ஹெராயின் வைத்திருந்த ஒருவரும் கேரளா கஞ்சா வைத்திருந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் சம்மாந்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இவ் வேட்டையில் பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சதங்கராஜா பரிசோதகர், பொ செல்வகுமார் மற்றும் குகனேசன், சுமேத அபேவர்த்தன, பத்மசிவம், ரஜனிகாந்த் ஆகியோர் பங்கு பற்றியுள்ளனர்.

## தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

தபால் சேவைகள் அமைச்சர் அப்துல் ஹலீமுடனான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தங்களது அடையாள வேலைநிறுத்தம் தொடரும் என தபால் சேவைகள் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதனால் நேன்று வியாழன் (18) மாலை 4 மணி வரை குறித்த அடையாள வேலைநிறுத்தம் தொடரும் என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கொழும்பு மத்திய தபால் பரிமாற்றக்கத்தின் பணியாளர்கள் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பித்த அடையாள வேலைநிறுத்தம் நேன்றும் 3 ஆவது நாளாகத் தொடர்கிறது.

தபால் ஊழியர்களின் குறித்த அடையாள வேலைநிறுத்தம் காரணமாக கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகத்தில் சுமார் 2 இலட்சம் கடிதங்கள் தேங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

## சரவணபவான் ஹொட்டல் ராஜகோபால் காலமானார்

உலக அளவில் பல கிளைகளைக் கொண்ட சரவணபவன் ஹோட்டல் குழுமத்தின் அதிபர் ராஜகோபால் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 71.

உடல்நலக்குறைவுக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த அவருக்கு ஒரு கொலைக்குற்றம் தொடர்பாக ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

2009-ஆம் ஆண்டு இந்த வழக்கு தொடர்பாக அவருக்கு தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், சிறை செல்வதற்கு எதிராக அவர் கடுமையாக போராடி வந்தார். கடந்த ஜூலை 9-ஆம் திகதியன்று மருத்துவக் காரணங்களைக்காட்டி சிறை செல்வதை தவிர்க்க அவர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்தார். ஆனால், அந்த மனு நிராகரிக்கப்பட்டது.

சரவணபவன் ஹோட்டல் குழுமத்துக்கு உலகெங்கிலும் 80-க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. நியூ யார்க், லண்டன், சிட்னி போன்ற பெரு நகரங்களிலும் இந்த ஹோட்டலுக்கு கிளைகள் உள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இந்த குழுமத்தில் பணிபுரிகின்றனர்.

ஜோதிடர் ஒருவரின் ஆலோசனை பேரில் தனது பணியாளர்களில் ஒருவரின் மனைவியை திருமணம் செய்துகொள்ள அவர் விரும்பியதாக கூறப்பட்டது.

கடந்த 2001-இல் இப்பெண்ணின் கணவர் காணாமல்போன நிலையில், அதுகுறித்து அப்பெண் போலீஸில் புகார் செய்தார். பின்னர் காட்டுப்பகுதி ஒன்றில் அந்த பெண்ணின் கணவர் உடல் கண்டெடுக்கப்பட்டது.

நன்றி -- பிபிசி

## தென்மேற்கு மற்றும் மலையகத்தில் மோசமான காலநிலை

நாட்டின் தென்மேற்குப் பிரதேசத்திலும், மத்திய மலை நாட்டிலும் எதிர்வரும் சனிக்கிழமை வரை மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யலாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தப் பிரதேசங்களில் வீசும் காற்றினால் வீட்டுக்கூரைகளுக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

பாரியளவிலான மரங்களும், கிளைகள் மின்கம்பங்களில் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை நாட்டில் தற்சமயம் நிலவும் சீரற்ற காலநிலை பற்றிய தகவல்களை 117 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, களனி கங்கைக்கு அண்மித்து கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

லக்ஷபான நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்படவிருந்ததால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இல்லையேல் கொல்வீர் தமிழ்

**சி ஜெயசங்கர்**

நீ பெருமை கொண்டாடும் இசை
இல்லை உன் மொழியில்
வல்லான் ஆடலில் இடமில்லை
உன் மொழிக்கு
உள்ளம் உருக்கும்
இறையழைப்பில்

இடமில்லை உன் மொழிக்கு
கல்வி கேள்விக்கும் இடமற்ற
உன்மொழி
திரையிசையில் பரவி
உலகெலாம் தழைக்கிறது.

இலத்திரன் தமிழ்
இனிது பேசிப் பெருகும்
இளந்தமிழர் வெள்ளத்தில்
இன்னமும் வற்றாத கிணற்றுநீர்
ஊற்றெடுக்கும் உலகு செய்ய
திண்ணம் கொள்ளும் ஏது
உண்டோ
சொல்வீர்
இல்லையேல் கொல்வீர் தமிழ்

# படுவான்கரை மீது ஏன் பாராமுகம்?

“படுவான்கரை” மட்டக்களப்பின் நெற் களஞ்சியம். அவ்வளவு ஏன் இலங்கைக்கு உணவளிக்கும் மிக முக்கியமான பகுதிகளில் அதுவும் ஒன்று. ஆனால், அண்மைக்காலமாக அங்கிருந்து வரும் செய்திகள் இலங்கைக்கு இனிப்பானதாக இல்லை. வற்றிப்போன நீர் நிலைகள், காய்ந்துமடியும் வயல்கள் என அவை நீண்டு கொண்டே போகின்றன. வாராவாரம் “படுவான் பாலகன்”, எமது “அரங்கம்” பத்திரிகையின் படுவான் திசையில் பகுதியில் அவை குறித்து தரும் குறிப்புகள் எண்ணில் அடங்காதவை.

இப்போது போதாக்குறைக்கு யானைகளின் தாக்கமும் அதில் அடக்கம். மழை பெய்தால் வெள்ளம், இல்லையென்றால் உடனே களம் காய்ந்துபோகும். இதுதான் படுவான்கரையின் கதையாகியிருக்கிறது. இதற்கு என்ன செய்வது, மழை பெய்வதும் பொய்ப்பதும் எமது கையிலா இருக்கிறது என்ற கேள்வி எழலாம். ஆனால், அப்படி சும்மா புறக்கணித்துப் போகக்கூடிய விடயமல்ல இது. இலங்கை உள்நாட்டுப் போர்க்காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் படுவான்கரைப் பகுதியும் ஒன்று. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இறந்தவரைக் கைவிட்டு அந்தப் பகுதி மக்கள் ஏனைய பகுதிகளை நோக்கி ஓடியது இன்றுபோல் ஞாபகத்தில் இருக்கிறது.அதன்பிறகும் போர் முடிய அங்கு வயல்களிலும் மேட்டு நிலங்களிலும் மீண்டும் பயிரிட்டு தமது முயற்சிகளை அவர்கள் ஆரம்பித்துவிட்டனர். எழுவான்கரைப் பகுதி மக்களும் அதில் அடக்கம்.

நாட்டுக்கே உணவு தரும் நிலமாக ஒரு பகுதி இருந்தால், பொருளாதார நலனில் அக்கறை கொண்ட மக்கள், அரசாங்கம் அனைவரின் கவனமும் அந்தப் பகுதியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அந்த அக்கறையை இங்கு காணமுடியவில்லை.

மழை வந்தாலும் வெள்ளத்தால் வயல்வெளி அழிவு, மழை பொய்த்தாலும் தாவரங்களுக்கு சாவு என்ற நிலையில் இருந்து படுவான்கரையை மீட்டெடுக்க இதுவரை காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? நிலைமைக்கு ஏற்ப மழையில் நீரைத் தேக்கி வைக்கவும், வறட்சியில் அதனைத் திறந்துவிட்டு தாவரங்களைக் காக்கவும் அங்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கு எந்தவிதமான பதிலும் இதுவரை இல்லை.

வெயில் காலங்களில் அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர் தேவைக்கே அங்கு நீர் இல்லாத நிலை இன்றுவரை தொடர்கிறது. இவற்றை தவிர்க்க நீண்ட கால அடிப்படையிலான திட்டங்கள் தேவை என்பது உணரப்பட்டு பல தசாப்தங்கள் ஆகிவிட்டன. ஆனால், உரிய நடவடிக்கைதான் இல்லை.

“எல்லினோ” போன்ற காலநிலைப் போக்குகள் திடீர் அழிவுகளை ஏற்படுத்துவதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவற்றையும் கடந்து திட்டங்கள் தீட்டப்படாவிட்டால், நாம் உணவுக்காக வெளிநாட்டில் கையேந்தி நிற்பது மேலும் அதிகரிக்கும்.

இதற்காக எந்த ஒரு தனி நபரையும் இங்கு நான் குற்றம் சாட்டப்போவதில்லை. இது நமது கூட்டுப் பொறுப்பு. எமது மண்ணின் அழிவுகளில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்களும், அவற்றின் அமுல்படுத்தலும் நம்மிடம் இருந்தே உதயமாக வேண்டும். ஆகவே நாம் அனைவரும்; சாதாரண பொதுமக்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் ஏனைய நிபுணர்கள் என்று அனைவருமே இதற்குப் பொறுப்பு.
பல வருடங்களாகவே இரு போகங்களிலும் தோற்றவர்களாக படுவான்கரை விவசாயிகள் மனதில் அழுகிறார்கள். விவசாயத்தை கைவிட்டு விடலாமோ என்ற எண்ணம் அவர்களின் மனதில் தோன்றி மறைவதையும் மறுப்பதற்கில்லை. ஆனால், ‘விவசாயம் நமது பரம்பரைத் தொழில், அதனைக் கைவிடக் கூடாது’ என்பதற்காக தொடர்ந்து கடன்பட்டும் அதனைத் தொடரும் விவசாயிகள் பலரை நான் அறிவேன். அவர்கள் தாம் கைவிடப்பட்ட ஒரு நிலையை, தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நிலையை உணர்கிறார்கள். இனியும் தாமதித்தால் “மட்டக்களப்பில் விவசாயிகள் கடனில் தற்கொலை” என்ற செய்தியை கேட்கத்தொடங்கவும் நேரிடும். தமிழகத்தில் ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட நிலைமை நமது விவசாயிகளுக்கும் வேண்டாம்.

முடிந்த அளவு நீர் சேமிப்புக்கும், அதன் வரத்து அதிகரிக்கும் காலத்தில் அதனை விவசாயத்துக்கு பாதிப்பில்லாத வகையில் ஒட்டவும், தேக்கி வைக்கவும் திட்டங்களை தீட்டவேண்டும். இயற்கையோடு போட்டிபோடும் ஒரு தேவைதான். ஆனால், நாம் இயற்கையை ஏற்கனவே மாற்றியமைக்க முயன்றதும் சில இடங்களில் இதற்கு காரணம். மாற்றங்களைச் செய்வோம். அவை நமக்கும் நம் ஊருக்கும் பயனுள்ளதாக அமையட்டும். அரசாங்கங்களை இதற்காக காத்திருப்பதில் பலனில்லை என்றும் தோன்றலாம். ஆனால், அவற்றின் உதவி இல்லாமலும் இதனைச் சாதிக்கவும் முடியாது. காரியம் சிரமமானாலும் அதனைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

முதலில் நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும். பல்கலைக்கழக சமூகமும் இந்த விடயத்தில் செய்ய நிறைய இருக்கிறது. மட்டக்களப்பின் விவசாயத்துறை சார்ந்த ஆய்வுகளை அவர்கள் பகிரங்கப்படுத்த வேண்டும். உரியவர்களின் நடவடிக்கைக்கு அவை சமர்ப்பிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழக சமூகம் இந்த விடயத்தில் அதிக அழுத்தங்களைக் கொடுக்க முடியும். ஒரு பிரதேசத்தில் ஒரு பல்கலைக்கழகம் இருப்பதன் பலனே முக்கியமாக இதுவாகத்தான் இருக்க முடியும்.

ஒரு கை மாத்திரம் ஓசை எழுப்ப முடியாது. முழு மாவட்டமுமே ஓங்கி ஒலிக்க வேண்டும்.

**சீவகன் பூபாலரட்ணம்**

# தமிழ்ச் சமூகத்தின் இரு பங்களிப்பாளர்களின் இழப்பு



ஈழப்போராட்டத்தின் பின்னணிச் சக்தியாக விளங்கிய இரண்டு பெரிய பங்களிப்பாளர்களை இழந்து நிற்கிறோம். ஒருவர் வண பிதா ஜேம்ஸ் பத்திநாதர்; மற்றவர் குலமக்கா என்று பலராலும் அழைக்கப்படும் ஜோஸப்பின் வேதநாயகம்.

ஒருவர் கிறிஸ்தவ மதகுரு. மற்றவர் சாதாரண குடும்பப் பெண். ஆனால், இருவரும் தமது சமூகப் பற்றினாலும் ஒடுக்கு முறைக்கு எதிரான விடுதலை உணர்வினாலும் மேலுயர்ந்தவர்கள். அதேயளவுக்கு தமது வாழ்க்கைக் காலத்தில் பாடுகளைச் சுமந்தவர்களும் கூட.1970 களிலிருந்து பத்திநாதர் பாதருடைய சமூகப் பணிகள் வலுவாக ஆரம்பிக்கின்றன. அது அவர் இறக்கும் வரையான 2019 வரையும் தளர்வின்றித் தொடர்ந்தது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள். இந்த ஐம்பது ஆண்டுகளிலும் ஈழத்தமிழ்ச் சமூகம் சந்தித்த அத்தனை நெருக்கடிகளையும் பத்திநாதர் பாதரும் சந்தித்திருக்கிறார். இந்த நீள்காலத்தில் ஈழத்தில் நிலவிய அரசியல், அதிகாரப்போட்டிகள், மாற்றங்கள், கெடுபிடிச் சூழல் அனைத்தின் மத்தியிலும் தாக்குப்பிடித்து நின்று பணியாற்றியதே அவர் மீதான மதிப்பை எல்லோருக்கும் உண்டாக்கியது.

இதற்கு அவர் எடுத்துக் கொண்ட நிலைப்பாடு முக்கியமானது. ஆனால், அது

மிகக் கடினமானது. சவால் மிக்கது. அவர் எப்போதும் ஒடுக்கப்படுவோரின் பக்கமாக நின்றார். ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துடன் இணைந்திருந்தார். அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தின்

கருணாகரன்

பல கிராமங்களில் சாதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக நின்றார் பாதர். அந்த மக்களுக்கான நிலம், கல்வி, பொருளாதாரம், அரசியல் உரிமைகள், சமூக அந்தஸ்து என அனைத்திலும் உயர்வை ஏற்படுத்துவதற்கான பணிகளில் முழுமையாகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டார்.மேலும் இனவிடுதலைப் போராட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் தொடக்கம் விடுதலைப்புலிகள் வரையில் அனைத்துத் தரப்பினரோடும் அவர் இணைந்தும் நெருங்கியும் செயற்பட்டிருக்கிறார்.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான போராளிகளின் மனதில் அவர் உயர்ந்து நின்றிருக்கிறார். போராட்ட இயக்கங்களோடு நெருங்கிச் செயற்பட்டிருந்தாலும் அவற்றின் மீதான விமர்சனங்களை அவர் வைக்கத் தவறியதில்லை. ஒரு விடுதலைப் பயணத்துக்கு இரண்டும் அவசியமானது என்பது பத்திநாதர் பாதருடைய நிலைப்பாடு. இது அவரைப்போராளிகளோடும் போராளிகள் அவரோடும் நெருக்கமாவதற்கான வாசல்களைத் திறந்தது. ஒரு உரிமை மிக்க உறவாக விளைந்தது.

இதற்கெல்லாம் காரணம் அவர் எப்போதும் விடுதலையை மனப்பூர்வமாக விரும்பியதேயாகும். அதைப்போலச் சனங்களை அவர் மிக மிக ஆழமாக நேசித்தார். அதிலும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்குதலுக்குள்ளாகும் மக்களின் மீது உச்சமான கரிசனையைக் கொண்டிருந்தார். இதற்காக அவர் பல்வேறு திட்டங்களை உருவாக்கிப் பணியாற்றினார். சனங்களுடனான பாதரின் உறவும் அப்படித்தான். உரிமையெடுத்துக் கொண்ட உறவது. ஒவ்வொரு குடும்பத்தையும் தன்னுடைய குடும்பமாகவே கருதிக் கொண்டு அவர்களுடைய நல்லது கெட்டது அனைத்திலும் பங்கெடுப்பார். தலையீடு செய்வார். இந்தத் தலையீடு என்பது அவர்களை ஈடேற்றுவதன் பாற்பட்டது. அதிகாரத்தின் பாற்பட்டதல்ல. அதாவது மத அதிகாரத்தையோ தான் ஒரு மதகுரு என்ற அடையாள அதிகாரத்தின் வழியானதோ அல்ல.
அத்துடன் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக, ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு 1980 களில் ஜேம்ஸ் பத்திநாதர் சிறைவாசமிருக்க நேர்ந்தது.

குலமக்கா:
இப்படித்தான் குலமக்காவின் மூத்த மகளான கல்யாணியும் ஈழவிடுதலைக்குரலாக முழங்கியதற்காக சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார். அந்த நாட்களில் குலமக்காவின் வீடு ஈழவிடுதலைச் செயற்பாட்டாளர்களின் களமாக விளங்கியது. மாவை சேனாதிராஜா, பிரான்ஸிஸ்



என்றழைக்கப்படும் கி.பி.அரவிந்தன், புஸ்பராணி, சி.புஸ்பராஜா, பத்மநாபா, மு. திருநாவுக்கரசு, ஜெயசீலன், வரதராஜப்பெருமாள் என அன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்த அரசியற் செயற்பாட்டாளர்கள் அத்தனைபேரும் குலமக்காவின் வீட்டைக்களமாகக் கொண்டிருந்தனர். இப்படியாக விளைந்த உறவின் காரணமாகவே பின்னாளில் வடக்குக் கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் குலமக்காவின் மருமகனாக மாறியதும்.

குலமக்காவின் வீட்டில் புழங்கியவர்கள் அரச படையினரால் தேடப்படும் சூழல் உருவாகியபோது குலமக்காவின் வீடு முழுமையான நெருக்கடியைச் சந்தித்தது. அந்த நெருக்கடி 2009 வரையில் - யுத்தம் முடியும் வரையில் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தது. ஆனாலும் குலமக்கா ஒரு போதுமே தன்னுடைய பணியிலிருந்தும் நிலைப்பாட்டிலிருந்தும் பின்வாங்கியதில்லை. எந்தச் சூழலிலும்

தொடர்ச்சி பக்கம்... 07

# கிழக்கு மக்களின் தேர்வு எது?

**எழுவான் வேலன்**

தமிழர்களின் ஏகபோக அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடந்தகால அரசியற் செயற்பாடுகள் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடான ஒன்றைப் பற்றி பெரும்பாலான தமிழர்கள் சிந்திக்கின்றார்கள். இந்த மாற்றுக் கட்சி வடகிழக்குக்கான ஒன்று என்பதிலும் பார்க்க, கிழக்குக்கு தனித்துவமான ஒரு அரசியல் தலைமையினைப் பற்றியே கிழக்கு மக்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது. இதுவரையான வடக்கின் அரசியல் தலைமை, கிழக்கை தமது தேவைக்குப் பயன்படுத்தியதனால் கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பே கேள்விக்குறியாகிப் போய்விட்டது என்பது இங்குள்ள மக்களின் மனக் குறையாக உள்ளது.

வடக்கில் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான மாற்று அணிக்கு தலைமை ஏற்றிருந்தாலும் அவருடைய தலைமையும் கடந்தகால யாழ் மேலாதிக்க அரசியல் தலைமையின் குணாம்சங்களையே கொண்டிருக்கும் என்பது கிழக்கு மக்களின் கருத்தாக இருக்கின்றது. இதனால் கிழக்குக்கான ஒரு அரசியல் கூட்டை உருவாக்குவதற்கான முயற்சிகள் கடந்த வருடம் முதல் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

கிழக்குத் தமிழர் ஒன்றியம் 23.08.2018 அன்று களுவாஞ்சிகுடி சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற அனைத்து தமிழ் கட்சிகளுடனான கலந்துரையாடலில் இதற்கான கால்கோள் இடப்பட்டது. அதன் பெறுபேறாக 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் ஒரு கூட்டணி திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களுடைய தலைமையில் உருவாகியிருப்பதாக அறியமுடிகின்றது. இந்தக் கூட்டமைப்பின் சார்பில் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான ஒரு தீர்வும் முன்வைக்கப்பட்டிருந்ததை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையில் 'ஈழத் தமிழர் பேரவை' எனும் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கட்சிகளை இணைத்து ஓர் அரசியல் கூட்டமைப்பை உருவாக்கி கிழக்கின் அரசியலை முன்னெடுக்கும் நோக்குடன் 14.07.2019 அன்று நொச்சிமுனையில் அமைந்துள்ள சன்னிபிஸ் விடுதியில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கூட்டத்துக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், மக்கள் முற்போக்குக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, போன்ற கட்சிகளுடன் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்குத் தமிழர் அமைப்பு, தமிழர் சிவில் சமூகங்களின் கூட்டமைப்பு, ஜனநாயகத் தமிழர் ஆகிய அமைப்புக்களும் கலந்து கொண்டிருந்தன.

இதில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சிகளும் பல்வேறுபட்ட விடயங்களைக் கலந்துரையாடி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கோபாலகிருஸ்ணன் தலைமையிலான 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' கட்சியினை தவிர்த்து புதியதொரு கூட்டணியினை உருவாக்க வேண்டிய தேவை இல்லை என்றும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பில் இணைந்து பணியாற்றுவதென்றும் கொள்கையளவில் ஒத்துக்கொண்டிருப்பதாக அறியமுடிகின்றது.

பெரியகட்சி, சிறிய கட்சி, கட்சிக் கொள்கை, கட்சியின் தனித்துவம் என்பதற்கு அப்பால் இவற்றையெல்லாம் ஒரு புறம் வைத்துவிட்டு கிழக்கு மக்களின் சமூக, பொருளாதார அரசியல் ஸ்திரத் தன்மைக்காக ஒன்றுபட்டு செயற்பட முன்வந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். இந்தக் கட்சிகள் கொள்கைளவில் மாத்திரம் உடன்பட்டது என்றில்லாது எதிர்கால அரசியலில் இந்த ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பது கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால் இந்த ஒற்றுமையைக் குழப்புகின்ற சக்தியாக கிழக்குத் தமிழர் ஒன்றியம் இருப்பது போல அவர்களுடைய பேச்சுகளும் நடத்தைகளும் இருப்பது வருத்தமளிக்கும் விடயமாகும். துளசிமண்டபத்தில் நடந்த கிழக்குத் தமிழர் ஒன்றிய முதலாவது கூட்டத்தில் இது ஒரு அரசியல் அமைப்பு அல்ல இது ஒரு மக்கள் அமைப்பாகும் இந்த அமைப்பில் கிழக்கில் இருக்கும் எந்த ஒரு தமிழனும் கட்சி வேறுபாடின்றி அங்கத்தும் பெறலாம் என்று கூறப்பட்டது. அக்கூட்டத்துக்கு எவ்வித கட்சி வேறுபாடின்றியே திரு.த.சிவநாதன் அவர்களாலும் திரு.த.கோபாலகிருஸ்ணன் அவர்களாலும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கூட்டங்களுக்கு எல்லாக்கட்சி உறுப்பினர்களுமே கலந்துகொண்டனர். இதன் பயனாய் எல்லோருடைய முயற்சியினாலும் அனைத்துக் கட்சிகளையும் ஒரு பொதுச்சின்னத்தில் ஒன்றிணைக்கும் நடவடிக்கையினை கிழக்குத் தமிழர் ஒன்றியம் மேற்கொண்டபோது அப்போது கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் இணைப்பாளர்களில் ஒருவராக இருந்த திரு.த.சிவநாதன் அவர்கள் இந்த அரசியல் கூட்டக் கலந்துரையாடல்களில் இருந்து ஒதுங்கியே இருந்திருக்கின்றார். அதற்கு அவரால் கூறப்பட்ட காரணம் தான் பதில் நீதவானாகக் கடமையாற்றுவதால் இவ்வாறான அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது எனக் கூறியிருக்கின்றார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கூட்டுக்குள் வராது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட சிவநாதன் அவர்கள் பிள்ளையான், டக்ளஸ், கருணா போன்ற ஆயுதக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டாம் அது கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினுடைய ஆதரவைக் குறைக்கும் எனக் கூறி கூட்டமைப்பு உருவாக்கும் முயற்சியினை கைவிடும்படி அம்முயற்சியில் ஈடுபட்டவர்களை கேட்டிருக்கின்றார். கிழக்கு மக்களின் அரசியல் இருப்புக்கு தியாகி, துரோகி என்ற வேறுபாடின்றி ஒற்றுமை அவசியம் என்பதனை வலிறுத்தி அம்முயற்சியினை திரு.த.கோபாலகிருஸ்ணன் தொடர்ந்து முன்னெடுத்திருக்கின்றார். இவ்வேளையில் அவர் தனிப்பட்ட விடயமாக இந்தியா சென்றபோது அவரை கிழக்குத் தமிழர் ஒன்றியத்திலிருந்து ஒதுக்கி தலைமைப் பதவியை திருதசிவநாதன் கைப்பற்றியிருக்கின்றார் என்பதை அறியமுடிகின்றது.

பின்பு கிழக்குத் தமிழர் ஒன்றியம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாது அதனை ஒரு அரச சார்பற்ற நிறுவனம் போன்று இயக்கி மக்களுக்கான நன்மைகளை முன்னெடுப்பதாகக் கூறியிருந்தார். இதன்பொருட்டு கிழக்குத் தமிழர் ஒன்றியம் சமூக நலன் அமைப்பாகவே பதிவும் செய்யப்பட்டுள்ளது.

29.03.2019 அன்றைய பத்திரிகைப் பேட்டியொன்றில் 'அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து எமது இலக்கினை அடைவதற்காக அயராது உழைத்து வருகின்றோம்.' எனக் கூறியிருந்தார். ஏற்கனவே ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு பதில் நீதிவான் பங்குகொள்ள முடியாது என ஒதுங்கியவர் தற்போது எந்த அடிப்படையில் அயராது உழைத்து வருகின்றார் என்பது விளங்கவில்லை. அவ்வாறெனின் அவர் பதில் நீதிவான் கடமையினை மக்கள் பணிக்காக துறந்திருக்க வேண்டும். பதில் நீதிவானாக இருந்துகொண்டு உழைக்கின்றார் எனின் ஏற்கனவே அவர் நீதித் தொழிலுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருக்கின்றார் என்பது அர்த்தமாகிவிடும்.

இது போன்றே 12.07.2019 அன்றைய பத்திரிகைப் பேட்டியொன்றில் 'தற்போது தமிழர்களுக்குத் தேவைப்படுவது ஒற்றுமை. இதனூடாகத் தமிழ் மக்கள் அரசியலில் பலம் பெறவேண்டும். இந்த விடயத்தில் துரோகிகள், தியாகிகள் என்று அரசியல் லாபத்திற்காக பேசிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமல்ல...........ஆகவே கூட்டமைப்பு இனிமேலாவது தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு சகல தமிழ் கட்சிகளையும் அனுசரித்து ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு எதிர்காலத்தில் தேர்தல்களைச் சந்திப்பதன் மூலம் தமிழர்களின் அரசியல் பலத்தை அதிகரித்துக் கொண்டு சாணக்கியமான அரசியலை இனிமேலாவது செய்ய வேண்டும்.' எனக் கூறியிருந்தார். சாதாரண வாசகர்கள் இந்தக் கூற்றின் நேர்மையினைச் சந்தேகிக்க மாட்டார்கள். ஆனால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தை யாருடன் சேர்ந்து ஆரம்பித்தாரோ அவரையே தனது பதவிக்காக ஓரம் கட்டி கிழக்குத் தமிழர் ஒன்றியத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கலாநிதி. சு.சிவரெத்தினம், எந்திரி.பரமேஸ்வரன், எந்திரி.திவாகர் போன்றவர்களையும் ஒதுக்கியவர், எப்படி ஒற்றுமை பற்றி மீண்டும் பேசுகிறார்? அத்துடன் கோபாலகிருஸ்ணன் அவர்களால் 'தியாகி, துரோகி என்று பார்க்கக்கூடாது ஒற்றுமை அவசியம்' எனக் கூறப்பட்டதை அவ்வாறோ மனப்பாடம் செய்து தனது சொந்தச் சிந்தனையாக ஒப்புவிப்பது தலைமைத்துவ பண்புக்கே அவமானமான ஒரு விடயமாகும்.

இவ்வளவுக்கு ஒற்றுமை பற்றி அக்கறையுடன் பேசும் கிழக்குத் தமிழர் ஒன்றியத் தலைவர் அனைத்துக் கட்சிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவருவது தொடர்பாக 14.07.2019ம் திகதி வரைக்கும் எந்த ஒரு கட்சியுடனும் கலந்தரையாடியதாக அறிய முடியவில்லை. ஏனெனில் 'ஈழத் தமிழர் பேரவை' அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட எந்த ஒரு கட்சியுமே, கிழக்குத் தமிழர் ஒன்றியம் இவ்வாறான ஒரு முயற்சியை மேற்கொள்வதாக சுட்டிக்காட்டவில்லை. அதுமட்டுமல்ல இதே தினத்தில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அரசியற் பிரிவை உருவாக்குவதற்கான அங்குரார்ப்பணக் கூட்டத்தினை கூட்டுறவு நிலைய மண்டபத்தில் கூட்டி 'ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சி' என ஒன்றை ஆரம்பித்துள்ளமைதான் அவருடைய ஒற்றுமையின் சீத்துவமாகும். இதில் மற்றுமொரு முரண்நகையும் இருக்கின்றது, என்னவென்றால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தில் இருப்பவர்கள் எல்லோரும் கட்சி பேதமின்றி இணைந்தவர்கள் தற்போது அது அரசியல் வடிவம் பெறுவதனால் அவர்களெல்லாம் தொடர்ந்தும் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தில் இருப்பார்களா என்பதை காலமும் தேர்தலும்தான் பதில் சொல்ல வேண்டும்.

கிழக்கில் இருக்கின்ற அனைத்து தமிழ் கட்சிகளும் நொச்சிமுனை விடுதியில் கூடி ஒற்றுமை தொடாபாகவும் கூட்டுத் தொடர்பாகவும் பேசிக்கொண்டிருக்கின்ற போது கூட்டுறவு மண்டபத்துக்குள் இருந்து 'ஒன்றிணைந்த தமிழர் கட்சி' என ஒன்றை ஆரம்பித்தவர்கள் ஒன்றிணைந்த பதம் சுட்டும் கட்சிகள் எவை என்பதை தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிட்டால் இது மக்களை ஏமாற்றும் இன்னுமொரு வடிவமாகும்.

மேற்படி கிழக்குத் தமிழர் ஒன்றியத் தலைமையின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது கிழக்குத் தமிழர் ஒற்றுமை அரசியல் இருப்பு என்பதற்கு மாறாக தொழிற்படும் ஒரு அமைப்பாகவே இருக்கின்றது என்பது தெளிவாகின்றது. எனவே அரசியல் நேர்மையற்றவர்கள் தொடர்பாக கிழக்கிலுள்ள தமிழர்கள் எதிர்காலத்தில் மிக அவதானமாக செயற்படுவது முக்கியமானதாகும். இல்லாவிட்டால் 'சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக' கிழக்குத் தமிழர்களின் நிலை வந்துவிடும் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

# சொல்லத் துணிந்தேன்! 15

பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிவகித்த அமரர்.ம.கனகரட்ணம் மற்றும் அவரது தங்கை திருமதி ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோரது காலத்திற்குப் பின்பு அதாவது 1989 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான முப்பது ஆண்டுகள் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு அனுபவமுள்ள-ஆற்றலுள்ள-ஆளுமையுள்ள-அர்ப்பணிப்புள்ள-உண்மையும் நேர்மையும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட-கண்ணியமான-செயற்பாட்டுத்திறன் மிக்கதோர் அரசியல் தலைமைத்துவம் கிடைக்கவில்லை. கல்முனை விவகாரம் இதற்கோர் உதாரணம்.

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்திற்குக் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்ற செய்தியும்-அதனைக் கல்முனைத் தமிழர்களில் ஒரு சாரார் வெடிக் கொளுத்திக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தியும் - கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரிச் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜவரில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத் தலைவரும் கல்முனை முருகன் ஆலயப் பிரதம குருவுமான சிவஸ்ரீ.க.கு. சச்சிதானந்தசிவம் குருக்கள் மற்றும் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சா.சந்திரசேகரம் (ராஜன்) ஆகிய இருவரும் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரனைச் சந்தித்து கணக்காளர் நியமனத்திற்காக அவரையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் போற்றித் துதிபாடிய செய்தியும் என்னைக் கவலை கொள்ளச் செய்தன. போயும் போயும் இந்தக் கணக்காளர் நியமனத்திற்காகவா ஐந்து உயிர்கள் சாகத்துணிந்தன.

கல்முனை விவவகாரத்தில் ஓர் மலினமான – மக்களை ஏமாற்றுகின்ற 'தேர்தல் அரசியல் நாடகம்'தான் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. தமிழ்ச்சமூகம் அரசியல் விழிப்புணர்வு பெறவேண்டும். பிரதேச செயலகமொன்று உருவாக்கப்பட்டால் அதற்குரிய ஆளணிகளும் (கணக்காளர் உட்பட) அதிகாரங்களும் கையளிக்கப்படுவது அரசநிர்வாக இயந்திரத்தின் வழமையான நடைமுறையாகும்.

கல்முனைத் தமிழர்கள் கடந்த முப்பது வருடங்களாகப் போராடிவருவது

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில்வீதியை உத்தேச கல்முனை வடக்குப் பிரதேசச் செயலகப் பிரிவின் தெற்கு எல்லையாகக்கொண்ட



தமிழ்ப்பெரும்பான்மை கல்முனைவடக்குப் பிரதேச செயலகத்தையே தவிர கணக்காளர் நியமனத்தை அல்ல. அப்படியானால் 12.04.1989 இல் கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம் நிறுவப்பெற்று இந்த முப்பது வருடகாலமாகக் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படாதது ஏன்?

குறைந்தபட்சம் கடந்த உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலின்போது நற்பிட்டிமுனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்கிடையில் கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தருவேன் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் வாக்குறுதியளித்த தினத்திலிருந்து கணக்கிட்டாலும்கூட கடந்த ஒன்றரை வருட காலத்திலாவது கணக்காளர் ஒருவர் நியமிக்கப் படாதது ஏன்?

கணக்காளர் நியமனம் ஒன்றினைப் பெற்றுத்தருவதற்காக யாராவது முன்வந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும்வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் 'முகூர்த்தம்' பார்த்துக் கொண்டிருந்தார்களா?

உண்மையில் கணக்காளர் நியமனம் என்பது வெறும் 'கண்துடைப்பு'த்தான். நிலாவைக் காட்டிக் குழந்தைக்குச் சோறு ஊட்டுவது போல் இந்தக் கணக்காளர் நியமனத்தைக் காட்டி எதிர்வருகின்ற பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ்மக்களின் வாக்குகளைச் சூறையாடுகின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வழமையான ஏமாற்று அரசியல்தான் இது.

தமிழ் மக்கள் இனிமேலாவது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏமாற்று அரசியலை - 'ஏட்டுச்சுரக்காய்' அரசியலை - தேர்தல் வெற்றிகளை மட்டுமே குறியாகக் கொண்ட சுயலாப அரசியலை - அறிக்கை அரசியலைப் புறந்தள்ளி அறிவுபூர்வமான – மக்கள் நலனை மட்டுமே நோக்கமாகக் கொண்ட செயற்பாட்டு அரசியலை நோக்கித் திசை திரும்ப வேண்டும்.

ஆம்! கிழக்குமாகாணத்தமிழர்களின் இன்றைய அவசரமான உடனடித் தேவை உண்மையான – நேர்மையான – வெளிப்படைத்தன்மையான – அனுபவமும் ஆற்றலும் ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க தன்னலமற்றதோர் மாற்று அரசியல் தலைமைத்துவம் ஆகும்.

அதற்கான களத்தையும் தளத்தையும் கல்முனை மண் ஏற்படுத்தித் தரட்டும்.

---

# வரலாற்றில் காணாமலாக்கப்பட்ட பிரான்சாஸ் வெலென்டின்!

05.07.2019 வாரத் தொடர்ச்சி....(இதழ் 69)

இலங்கையில் மொழிபெயர்ப்பு



இலங்கையில் நெடுங்காலமாக இயங்கிவந்த டச்சு பறங்கியர் சங்கம் பல ஆண்டுகளாக ஒரு ஆய்வுச் சஞ்சிகையை (Journal of the Dutch Burgher Union of Ceylon) வெளியிட்டு வந்தது. எனது இந்தக் கட்டுரைக்கான தேடுதல்களின் போது அந்த சஞ்சிகையில் ஆய்வாளரான மொத்தாவு (S.A.W.Mottau) என்பவரால் 1983இல் மொழிபெயர்க்கப்பட்ட 16 அத்தியாயத்தையும், 1985 ஆம் ஆண்டு மொழிபெயர்த்த 17வது அத்தியாயத்தையும் (இறுதி அத்தியாயம்) கண்டெடுக்க முடிந்தது. அதற்கு முந்திய இதழ்களில் வேறெந்த அத்தியாங்களும் மொழிபெயர்க்கப்படாததால் இந்த கடைசி இரு அத்தியாங்கள் மாத்திரம் மொழிபெயர்க்கு தெரிவு செய்யப்பட்டதன் நோக்கத்தைப் பற்றி அறிய முடியவில்லை. ஆனால் அந்த இரண்டுமே இலங்கையின் மதங்கள் பற்றியவை. அதன் பின்னரும் கூட இந்த முக்கிய நூல் ஆங்கிலத்தில் நூலாக முழுமையாக இன்னமும் வெளிவரவில்லை என்று அறிய முடிகிறது. உதாரணத்திற்கு 16வது அத்தியாயத்தில் ஒரு சுவாரசியமான பந்தியை இங்கே பாருங்கள்.

அவர்களின் மதவழிபாட்டுத் தளத்தை கோவில் (Pagodas) என்று அழைக்கிறார்கள் (கோவிலைத் தான் குறிப்பிடுகிறார் என்று புரிந்துகொள்வோம்). புராதன இலங்கை மன்னன் திருகோணமலையில் பிரமாண்டமான கோவிலைக் கட்டியிருக்கிறான். Tricon-maele எனும்போது சிங்கள மொழியில் "மூன்று கோபுர மலைகள்" என்பது பொருள். இந்திய உபகண்டத்தின் பிரபல கோவிலாக அது திகழ்ந்திருக்கிறது. ஆனால் 1622 ஆம் ஆண்டு இது முற்றிலும் இடிக்கப்பட்டு அதிலிருந்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு போர்த்துக்கேயர் அங்கு அழகான கோட்டையைக் கட்டினர்.

திருகோணமலையில் மாத்திரமல்ல பௌத்த விகாரைகள் அழிக்கப்பட்ட கதைகள் கூட அவரின் நூலில் உண்டு. இலங்கை பற்றி வெளியான 5வது தொகுப்பில் "Description of Ceylon" தலைப்பின் கீழ் அவற்றை 17 அத்தியாயங்களுக்கு தொகுத்திருக்கிறார். முதல் அத்தியாயமே இலங்கையில் அழைக்கப்பட்ட அதிகாரத் தரப்பினரின் பதவிப் பெயர்களை வரிசைப்படுத்தி விளக்கப்படுத்துவதுடன். அந்த அத்தியாயத்தில் சாதிப் பெயர்களையும் அவற்றின் விளக்கங்களையும் கூட வெளியிட்டிருப்பது கவனிப்புக்குரியது.

இந்த நூலில் அவர் நூற்றுகணக்கான சாதிக் குழுமங்கள் மட்டுமன்றி அந்த



சாதிகளின் உப சாதிகளின் பட்டியலையும் அவர் வெளியிட்டிருப்பது முக்கிய சான்றுகள்.

உதாரணத்திற்கு சிங்கள சமூகத்தில் இருக்கும் கராவ சாதியினர் மத்தியில் உள்ள பிரிவுகள் மாத்திரம் 1) Caraeuw 2) Boroedal Caraeuw 3) Dandoe-Caraeuw 4) Moroe-Caraeuw 5) Kespe-Caraeuw 6) Cadoel –Caraeuw 7) Tock-Keulo 8) Godo-Keulo and 9) Indimal-Keulo என்கிற 9 குழுமங்களை அடையாளம் காட்டுகிறார். கடலில் மீன் பிடி முறையில் இவர்களுக்கு இடையில் வித்தியாசம் இருந்ததையும் அந்த

**என்.சரவணன்**

வித்தியாசங்களையும் வெலென்டின் விரிவாக விளக்கியிருக்கிறார். குறிப்பாக கடலின் எந்த ஆழங்களில் பிடிப்பது, எந்த வலைகளைப் பயன்படுத்துவது, எந்த முறைகளைக் கையாள்வது போன்ற தொழில் பிரிவுகளால் இவர்களின் சாதிகள் வகைப்படுத்தப்பட்டிருந்ததை குறிப்பிடுகிறார்.

கராவ சாதியினர் படிகளிலும் இருந்ததாகவும் அவர்கள் முதலியார், முகாந்திரம் போன்றவர்களுக்கு கீழ் பணியாற்றியதாகவும் விளக்குகிறார்.

அதுபோல சிங்கள சமூகத்தில் இருந்த துராவ சாதியினரில் இருந்த 10 பிரிவினரையும் அவர்களின் வேலைப்பிரிவினைகளையும் குறிப்பிடுகிறார். யானைப் பாகன்கள், மரம் வெட்டுபவர், தேங்காய் பறிப்பவர், கள்ளிறக்குபவர் போன்றவர்களையும் பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

இலங்கையில் துராவ சாதியினர் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். போர்த்துகேயர்களால் ஆரம்பத்திலேயே அதிகமானோர் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்பட்டவர்கள். பிற்காலத்தில் கொவிகம சாதியினரின் அந்தஸ்துக்கு

தொடர்ச்சி... (பக்கம் -15)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## 'இங்கு யானையும் பிரச்சினைதான், தண்ணீரும் பிரச்சினைதான்! யாரிடம் சொல்லி அழ?'

'யானைக்கு நாம ஒண்டும் செய்யாமல் பார்த்திருந்தா அது அதிர பாட்டில இருக்கத சாப்பிட்டுத்து போயிடும்' என்கிறார் சில்லிக்கொடியாறு கிராமத்தினைச் சேர்ந்த அழகையா. யானையின் பிரச்சினை ஒரு பக்கமாகவிருந்தாலும் குடிநீர் இல்லாததுதான் பெரிய பிரச்சினையாக உள்ளதெனவும் கூறி அங்கலாய்க்கின்றார் அவர்.



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதி காடுகளையும், வேளாண்மை வயல்களையுமே அதிகம் கொண்ட பகுதியாக உள்ளது. இப்பகுதியில் யானைகளின் நடமாட்டமும் அதிகமாகத்தான் இருக்கின்றன. காடுகளை அண்மித்து வயல்நிலங்களும், மேட்டுநிலப் பயிர்செய்கைகளும் மேற்கொள்ளப்படுவதினால் அவற்றினை உண்பதற்காக யானைகள் விவசாயச் செய்கைகளுக்குள் ஊடுருவுகின்றன.



தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக கடன்பட்டு விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாயிகளும் யானைகள் உள்நுழைந்துவிடக் கூடாதென்பதற்காக பரண் அமைத்து காவற்பணியில் ஈடுபடுகின்றனர். இதன்போது யானைகளை துரத்துவதற்காக சத்தமிட்டும், வெடி கொளுத்தியும் துரத்துகின்றனர். இதனால் கோபம் அடைகின்ற யானைகள் மனிதர்களைத் துரத்துவதும், தாக்குவதும் இதனால் காயங்களுக்கு உள்ளவாதும், மரணங்களை சந்திப்பதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இரண்டும் உயிரினங்கள்தான் இரண்டும் உயிர்வாழத்தான் வேண்டும். இரண்டிற்கும் உணவும் தேவைதான் ஆனாலும் யானைக்கும், மனிதர்களுக்குமான போராட்டம் படுவான்கரையில் அதிகம் இருக்கத்தான் செய்கின்றன.

இருபக்கமும் இழப்புக்கள் இடம்பெறுவதையும் தவிர்க்க முடியாமல் இருக்கின்றது. அழகையா சொல்வதுபோல் யானை வந்து பயிரைச் சாப்பிட்டுத்து போகட்டும் என்று விட்டுக்கொடுப்புடன் இருந்தால் பிரச்சினையை குறைத்துவிடலாம் என பக்கத்தில் நின்ற இராசலிங்கம் சிரிப்புடன் கூறினான். பகிடியாக இராசலிங்கம் கூறினாலும் அழகையாவை அவ்வார்த்தை சிந்திக்கச் செய்யத்தூண்டியது.

உண்மையில் இராசலிங்கம் சொல்வதுபோன்று யானைகள் உண்பதற்கென ஒரு பரந்த பகுதியில் விவசாயத்தினை செய்தால் ஓரளவாவது யானைப் பிரச்சினையைக் குறைக்கலாம். இது சாத்தியமாகுமா? என்றான் இராசலிங்கம். சாத்தியமாக்குவது சிக்கல்தான் முயற்சி செய்து பார்க்கலாம்.



சிறுபோகச் செய்கையின் போது யானை கிராமங்களை நோக்கி உள்நுழையும், அதிலும் வேளாண்மை அறுவடை செய்ய ஆரம்பிக்கும் போது, ஒவ்வொரு இடமும் அறுவடை செய்து முடிய முடிய அவ்விடங்களைத்தேடி வந்து கொண்டே இருக்கும். அதே போலதான் பெரும்போக விவசாயச் செய்கையின் போதும் யானை கிராமங்களுக்குள் நுழையும். இரு காலப்பகுதியின் போதுதான் அதிகம் யானை கிராமங்களுக்குள் உள்நுழைவதுண்டு.



இப்போது அறுவடை நடைபெறுகின்றது, யானைகளும் கிராமத்திற்குள் நுழைய ஆரம்பித்துவிட்டன. 'இந்தா பார் தம்பி லைட்டோடுதான் வந்த நான். யானை இனிவரும். போன கிழமைதான் சில்லிக்கொடியாறு வீதியோரத்தில் இருக்கின்ற வாழைத்தோட்டத்தினையும் அழித்துவிட்டு போனது. இரவும் வந்தது, நான் சத்தமும் போடல்ல, ஒண்டும் செய்யவும் இல்லை. அதுட பாட்டிற்கு வந்தது அதுட பாட்டிற்கே போய்விட்டது. இப்போ வேளாண்மையை சாப்பிடுறத்திற்கு யானைகள் வருகின்றன. அறுவடை முடிந்ததும் வீட்டில் சேமித்து வைத்திருக்கின்ற நெல்லை சாப்பிடுவதற்காக வரும். அப்போதுதான் வீடுகளை உடைக்கும். இதெல்லாம் இப்போ பழகிப்போன விடயமாச்சு. இந்த காலப்பகுதியில் யானையின் பிரச்சினையினைவிட குடிநீர் பிரச்சினைதான் பெரிய பிரச்சினை. பிரதேசசபையினால் ஒரு தாங்கி தண்ணீர் வைப்பாங்க, அத வைச்ச உடனேயே எல்லோரும் சேர்ந்து முடிச்சிடுவாங்க. பிறகு ஒவ்வொரு இடமா, ஒவ்வொரு கிணறா தண்ணீர் தேடி போக வேண்டும். தேடி இருக்கின்ற கிணற்றில் தண்ணீரை வடிகட்டித்தான் எடுக்கவேண்டும். காலையில் எழுந்தா இரவு வரைக்கும் தண்ணீர் தேடி எடுத்து குடித்து, குளிக்கிறதிலேயே காலம் போகுது. வேற வேலையொன்றும் பார்க்க முடியாத நிலையாகத்தான் போகின்றது. எப்போதுதான் இந்த தண்ணீர் பிரச்சினை முடியப்போகுதோ ஆண்டவனுக்குத்தான் தெரியும். முட்டியையும், கேனையும் தூக்கினா நடக்குறதிலையே பாடுபோகுது. இந்த நேரத்திலதான் கோபமும் வருகுது. இந்த அரசாங்கமும் நம்மட பிரச்சினையை கவனத்தில் கொள்ளுகின்றதில்லை' என்று கூறினான். இருவரும் மாரியம்மன் கோயில் சடங்கு பார்ப்பதற்காக அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.



படுவான் பாலகன்

# தமிழர் தலைவர் அமிர்தலிங்கம்

தமிழில் வல்லபம் மிக்க பேச்சாளரான அமிர்தலிங்கம் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரிடம் தமிழ் கற்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராக விபுலானந்தர் கடமையாற்றிய போது பல்கலைக்கழக மாணவனாக இருந்த அமிர்தலிங்கத்துக்கு அந்த வாய்ப்பு கிட்டியது. அன்றிலிருந்து மட்டக்களப்பு தமிழகத்துக்கும் அவருக்குமான தொடர்புகள் ஆரம்பித்தன எனலாம். அதன் பின்னர் இளங்கலை பட்டதாரியாக வெளியேறிய அமிர்தலிங்கம் பல அரசியல் கட்டுரைகளை எழுததொடங்கினார். மண்டூரில் இருந்து 1948-1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த பாரதி என்னும் இலக்கிய சஞ்சிகையில்கூட அவரது அரசியல் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

1949 ல் சா.ஜே.வி.செல்வநாயகம் ஆரம்பித்த தமிழரசு கட்சியூடாக அவரது நேரடி அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது. அவரது நீண்ட அரசியல் பயணமானது பதவிகளால் மட்டும் அலங்கரிக்கப்பட்ட. தாயிருக்கவில்லை. சாத்வீக போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், சத்தியாகிரகங்கள், ஊர்வலங்கள்,

கறுப்பு கொடியேந்தல்கள், கைதுகள், சிறைவாழ்வுகள், அஞ்ஞாதவாசங்கள், துன்பங்கள், துயரங்கள் என்பவற்றால் நிரம்பியது.

1952ஆம் ஆண்டு முதன் முதலாக போட்டியிட்ட பாராளுமன்ற தேர்தலிலே அவர் தோல்வி காண நேர்ந்தது. அதன்பின்னர் 1956ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த அவருக்கு தனது அரசியல் இருப்பை தொடர்ச்சியாக பேணுவதென்பது அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை. அதனை தொடர்ந்து வந்த 1960,1965 தேர்தல்களில் வெற்றிபெற்ற போதும் 1970ஆம் ஆண்டு தேர்தலில் அவர் தோல்வியடைய நேர்ந்தது. அந்த தேர்தலிலே அவர் சார்ந்த கட்சியும் பலத்த சரிவை சந்திக்க நேர்ந்தது.



1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்கள மொழி சட்டத்தை எதிர்த்து தமிழரசு கட்சியினர் நடாத்திய சத்தியாகிரக போராட்டம் முக்கியமானது. . காலிமுகத்திடலில் அந்த சத்தியாகிரிகள் மீது சிங்கள காடையர்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்தனர். அந்த தாக்குதலில் இரத்தம் தோய்ந்த ஆடையுடன் பாராளுமன்றம் சென்றார் அமிர்தலிங்கம்.

1953ஆம் ஆண்டு இந்தியாவில் ஹிந்தி எதிர்ப்பு வலுப்பெற்றபோது டால்மியாபுரம் என்கின்ற பெயரை கல்லக்குடி என மாற்றக்கோரி நடைபெற்ற போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே ரயிலை மறித்து தண்டவாளத்தில் தலையை வைத்து படுத்தார் கருணாநிதி. அந்தத் தீரச்செயல் எப்படி அவருக்கு "கல்லக்குடி காத்த வீரர்" என்கின்ற மங்காப்புகழை பெற்றுத்தந்ததோ அதேபோன்றே அமிர்தலிங்கம் காலிமுகத்திடலில் பட நேர்ந்த இரத்தகாயங்கள் அவருக்கு வலிமையான ஒரு அரசியல் அடையாளத்தை பெற்றுத்தந்தன.

1977 ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்ள நேர்ந்த போது செல்வநாயகம் மரணமடைந்தார். அவ்வேளையில் தனது சொந்த தொகுதியை விடுத்து செல்வநாயகத்தினுடைய காங்கேசன்துறை தொகுதியில்

**அறுமக்குட்டிபோடி**

போட்டியிட்டதனூடாக தனது தேர்தல் வெற்றியை காரியசித்தியாக்கினார் அமிர்தலிங்கம். அத்தோடு கூடவே தானே கட்சியின் இரண்டாம் தலைமை என்பதையும் உறுதி செய்தார். இத்தகைய செயல் திறன்மிக்க திட்டமிட்ட நகர்வுகளே அவருக்கு என்றும் உறுதுணையானது.

1970ஆம் ஆண்டுக் காலமானது தமிழரசுக் கட்சிக்கு மட்டுமன்றி தமிழ் தேசிய சக்திகளுக்கும் பெரும் சவால் மிகுந்த தொன்றாகவிருந்தது. செல்வநாயகத்தின் அந்திம காலங்களில் தமிழ் காங்கிரஸ் என்றும் தமிழரசு கட்சி என்றும் இரு பெரும் துருவ அரசியல் வடக்கு- கிழக்கில் கால்கொண்டிருந்தது. மறுபுறம் இடதுசாரிகளின் செல்வாக்கு யாழ்குடாநாட்டில் அதிகரித்து வந்தது. அதனை எதிர்கொள்ள தமிழ்த் தேசிய சக்திகளை ஒருங்கிணைத்து செயல்படவேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தார். அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பிளவுபட்ட தமிழரின் அரசியல் பாதையை ஒருமித்து கூட்டியெடுத்து தமிழர் விடுதலை கூட்டணியாக மாற்றியமைத்தமையானது அமிர்தலிங்கத்தின் தலைமைத்துவ ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும். அதனுடாகவே வரலாறு காணாத வகையில் 17 உறுப்பினர்களை ஒருமித்து வென்று அவர் எதிர்க்கட்சி தலைவராகி வரலாற்று சாதனையையும் புரிய முடிந்தது.

அதேவேளை "வட்டுக்கோட்டை தீர்மானத்தின்" ஊடாக தமிழர்களின் அரசியல் பாரம்பரியத்தை தீவிரவாத சிந்தனை நோக்கி திருப்பியதில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இந்த விடயத்தில் தமிழ் தேசியவாதிகள் இவரை ஒரு சாதனையாளராக பார்க்கின்றனர். அதேவேளை இளைஞர்களை ஆயுதமேந்த வைத்து விட்டு அவர்களுக்கு ஓர் சரியான தலைமையை கொடுக்க முடியாது, இளைஞர்களை கட்டுமீறி செயல்பட அனுமதித்தார். அல்லது விட்டு விலகி ஓடி தமிழ் நாட்டில் அஞ்ஞாதவாசமிருந்தார், இதனூடாக வன்முறையும் அராஜகமும் கொண்ட ஒரு பாரம்பரியத்தை போராட்டம் என்கின்ற பெயரில் வடக்கு கிழக்கில் செயற்பட வாய்ப்பளித்தார், என்கின்ற குற்றச்சாட்டுகளும் அவர் மீது இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்றன.

ஆனபோதும் இலங்கை தமிழர



பிரச்சினையை இந்தியாவின் டில்லி முதற்கொண்டு சர்வதேச அரங்குகளை எடுத்துச்சென்றதில் அமிர்தலிங்கத்துக்கு நிகர் இன்றுவரை யாருமிலர் எனலாம். ஒரு தேர்ந்த இராஜதந்திரியாக அவர் இந்திராகாந்தி,ராஜீவ்காந்தி போன்ற இந்திய தலைவர்களை ஆட்கொண்டிருந்தார். செல்வநாயகம் காலத்திலிருந்தே தமிழ்நாட்டின் பெருந்தலைவர்களான பெரியார், காமராஜர், போன்றவர்களோடு அறிமுகமானார். பின்னாளில் முதல்வர்களாயிருந்த எம்ஜிஆர், கருணாநிதி போன்றவர்களோடும் நெருக்கமான உறவுகளையும் பேணினார்.

ஆயுத போராட்ட இயக்கங்கள் ஐந்துடனும் இலங்கையரசுநேரிடையாகப் பேச வேண்டியதன் அவசியத்தை இந்தியாவுக்கு புரிய வைப்பதில் இந்திய இராஜதந்திரிகளை இலாவகமாக கையாண்டார். அதனுடாக 'திம்பு பேச்சுவார்த்தை' என்கின்ற உரையாடல் மேசையொன்றைநோக்கி முதன் முறையாக இலங்கையரசை நகர்த்துவதற்கு தேவையான நெருக்கடியை அவர் கொடுத்தார். பின்னர் அந்த அத்திவாரத்திலிருந்தே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூடச் சாத்தியமானது எனலாம்.

எத்தனைதூரம் தேசிய அளவிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கை தமிழர்களின் மதிக்கப்படுகின்ற தலைவராக அமிர்தலிங்கம் இருந்த போதும் பரந்துபட்ட தமிழ் மக்களின் பெருந்தலைவராக அவரால் மிளிரமுடியவில்லை. தமிழ் மக்களில் ஒருபகுதியினர் அவர் மீது கொண்டிருந்த கசப்புணர்வுகளை அவரால் வெற்றி கொள்ள முடியவில்லை. குறிப்பாக 1965-1970களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்களில் அமிர்தலிங்கமும் சரி அவர் சார்ந்த தமிழரசு கட்சியும் சரி ஒரு வலதுசாரி மேட்டுக்குடி நிலைப்பாட்டையே எடுத்திருந்தனர். பாராளுமன்றில் "சங்கானை சாதியெதிர்ப்பு" போராட்டத்தை "அது ஒரு ஷங்காய் சங்கானையல்ல" என்று கேலி செய்தார். வடகுடாநாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள் இடதுசாரிகளையும் ஏன் சிங்கள தலைமைகளை கொண்ட தேசிய அளவிலான கட்சிகளையும் வரவேற்ற அளவுக்குகூட அமிர்தலிங்கத்தை வரவேற்க முன்வராமைக்கு அவரது மேற்படியான அரசியல் தவறுகள் காரணமாயின.

அதேபோல செல்வநாயகத்துக்கு பின்னரான கட்சி தலைமையை கைப்பெற்றுகின்ற போட்டியில் கிழக்கின் முடிசூடா மன்னன் இராஜதுரையை ஓரங்கட்டி, ஒதுக்கிவிடுவதில் அவர் கையாண்ட வழிமுறைகள் ஒரு சிறந்த தலைமைக்குரிய குணவியல்புகளை கொண்டிருக்கவில்லை. அந்த மனத்தாங்கல்கள் இன்றுவரை கிழக்கு மக்களிடையே வடுக்களாக தொடருகின்றன.

1989ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் அவர் மட்டக்களப்பில் போட்டியிட்டமையும் மட்டக்களப்பு மக்களால் பெரிதாக வரவேற்கப்படவில்லை. அதனை ஒரு யாழ்-மேலாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாக மக்கள் பார்த்தனர். ஆனால் அதனை உணர்ந்துகொள்ள முடியாத நிலையில் அவர் படுதோல்வியடைய நேரிட்டது. எனினும் அவர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டார்.

இறுதியாக எந்த தீவிரவாதத்தை அவர் ஆதரித்தாரோ, அதிலும் எந்த ஆயுதபோராட்ட தலைமையை அவர் அதிகம் முன்னிறுத்தினாரோ அதுவே அவருக்கு காலனாயிற்று.

1949ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிய அமிர்தலிங்கத்தினுடையஅரசியல் வாழ்வு 1989ஆம் ஆண்டு அவர் கொல்லப்படும் வரையான சுமார் நாற்பது வருட காலம் நீடித்தது.

மூத்த அரசியல் தலைவரான அமிர்தலிங்கம் படுகொலை செய்யப்பட்டு இம்மாதத்துடன் முப்பது வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவர் கொல்லப்பட்டபோது அவருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வெளியே வந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இப்படிச்சொன்னார் "ஒரு சிங்கள மகனின் கரங்களால் இவர் கொலை செய்யப்படவில்லை என்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்கின்றேன்".

தொடர்ச்சி...

**தமிழ்ச் சமூகத்தின் இரு ............**

தன்னை உறுதியுடன் நிலைப்படுத்தி ஈழப்போராளிகளுக்குத் தன்னுடைய ஆதரவை வழங்கினார். அவருடைய கை ஆயிரக்கணக்கான போராளிகளுக்குச் சோறு போட்டது. ஆயிரமாயிரம் போராளிகளை அரவணைத்துப் பாதுகாத்தது. குலமக்காவின் வழிகாட்டலில் பிள்ளைகளும் சேர்ந்து நின்றனர். இதனால் குலமக்கா ஈழப்போராட்டத்தின் பெரும் பங்களிப்பாளராக நிழல் விரித்து நின்ற ஆலமரங்களில் ஒன்றாகினார். ஈழப்போராட்டத்தின் வரலாறு குலமக்காவையும் தன்னுடைய பக்கங்களில் எழுதிச் செல்கிறது.

இவைதான் பத்திநாதர் மீதும் குலமக்கா மீதும் எல்லோருடைய அன்பும் கரிசனையும் குவியக் காரணம். இவர்களுடைய இழப்பு இன்று எல்லோரையும் பாதித்திருக்கிறது என்றால், அதற்கு இவர்கள் இருவரும் தம்மைச் சனங்களோடு கரைத்திருந்ததும் சமூகப் பணியாளர்களாக, இன விடுதலையாளர்களாக, ஒடுக்குமுறைக்கு எதிரானவர்களாக வைத்திருந்ததுமே அடிப்படை. இந்த மேலுயர்வே இன்று இவர்களுடைய இழப்பையிட்டு தமிழ்ச்சமூகம் துயருற்றிருப்பதற்கும் நன்றி மேலீட்டினால் இவர்களை நினைவு கூர்வதற்கும் காரணமாகும்.



# புலையவெளியில் குடிகொண்ட பேச்சியம்மன்



மட்டக்களப்பு புலையவெளி பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா ஆரம்பமாகி நடந்து வருகின்றது. அதற்கமைய வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு தீமிதிப்புச் சடங்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் அடியார்கள் அம்மனின் அருளை வேண்டி அங்கு கூடிவருகிறார்கள்.

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிதியுதவியில் அபிவிருத்தி செய்யப்படும் புலையவெளி கிராமத்தில், அவர்களின் நிதியுதவியில் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டதுடன் அந்தக் கிராமத்திலும் அருகில் உள்ள தம்பனம்வெளி கிராமத்திலும் பல விதமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் அனுசரணையில் அம்மனுக்கு வருடாந்தச் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. அதன் இறுதி நிகழ்வாக ஞாயிறன்று அதிகாலை தீமிதிப்புச் சடங்கும் நடக்கவுள்ளது. அடியார்கள் அனைவரையும் புலையவெளி மக்களும் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரும் அம்மனின் அருளைப்பெற வருமாறு வரவேற்கிறார்கள்.

பேச்சியம்மன் ஆலயச் சடங்கின் போது பிடிக்கப்பட்ட சில படங்களை இங்கு காணலாம்.






விளம்பர அனுசரணை

மறைந்த கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் - திருமதி பரமேஸ்வரி சந்திரசேகரம்

ஆகியோரின் குடும்பம்



# பட்டறிவு

## முஸ்லிம் இனபெருக்க பீதி

என்.சரவணன்

அரச பத்திரிகையான தினமின (சிங்களம்), தினகரன் (தமிழ்), டெயிலி நியுஸ்) ஆகிய பத்திரிகைகளில் நேற்று வெளிவந்த பகிரங்க மன்னிப்பு கோரும் அறிவித்தல்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள பௌத்த போக்கின் விளைவாக வரிசையாக பல குற்றச்செயல்களை அச்சமூகத்தின் திட்டமிட்ட செயலாக புனைந்து பரப்பி வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் மும்முரமாக வளர்ந்துவிட்டிருப்பதை நாமறிவோம்.

ஈஸ்டர் படுகொலைகளுக்குப் பின்னான முஸ்லிம் சமூகத்தின் வாழ்நிலை என்பது சிங்கள பௌத்த சக்திகளால் தீர்மானிக்கின்ற ஒன்றாக பரிமாணம் பெற்றிருக்கின்றது.

புர்கா தடை, ஹலால் எதிர்ப்பு, முஸ்லிம் கடைகள் புறக்கணிப்பு, மதரசா பள்ளிக்கூடங்களை தடை செய்யும் நிர்ப்பந்தம், மாட்டிறைச்சி தடை என்கிற வரிசையில் முக்கிய ஒன்றாக பரிணமித்திருப்பது சுய இனப்பெருக்க சதி, ஏனைய இனங்களை மலட்டுத்தனத்துக்கு உள்ளாக்கும் சதி என்பவவையே. டொக்டர் ஷாபி மீது கருத்தடை ஒப்பரேசன் குற்றச்சாட்டுகள் ஆயிரக்கணக்காக சுமத்தப்பட்டபோதும் பொலிஸ் விசாரணையில் அத்தனையும் போலிக் குற்றச்சாட்டுக்கள் என்று மெய்ப்பிக்கப்பட்டன.

கடந்த ஆண்டு கடையொன்றில் கொத்துரொட்டியில் மலட்டு மருந்து கலந்திருப்பதாகக் கூறி ஏற்படுத்தப்பட்ட சண்டை வேகமாக பரவி அது பெரும் கலவரமாக உருமாறியது. இதன் நீட்சியாக தற்போது முஸ்லிம்களின் வியாபாரத்தைக் குறிப்பாக இலக்கு வைத்து அவர்களின் பொருட்கள் அனைத்திலும் இப்படி கருவுறுவதை தடுக்கும் வழிகள் உள்ளன என்றும் அனைத்தையும் புறக்கணியுங்கள் என்றும் பிரச்சாரம் செய்து முஸ்லிம்களின் வியாபாரத்தை அழிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெண்கள் அணியும் பிராக்களிலும், மோட்டார் சைக்கிள்களின் இருக்கைகளிலும் கூட ஜெல்கள் மூலம் இந்த கருத்தடைச் சதிகள் நடப்பதாக வீடியோக்களும் பரவவிடப்பட்டிருந்ததை நாம் கவனித்தோம்.

இதன் விளைவாக சிங்கள பௌத்தர்களால் சந்தேகத்துக்குள்ளாகும் அத்தனை வியாபார நடவடிக்கைகளும் பொலிஸ் முறைப்பாட்டுக்கு உள்ளாகின. அவற்றில் பல நீதிமன்ற வழக்கு விசாரணை வரை கொண்டு செல்லப்படுகின்றன.

இலங்கையில் கருக்கலைப்பு தடை. செய்யப்பட்டிருக்கிறது. எனவே கருக்கலைப்பை சட்டவிரோதமாக நடத்தும் பல நிலையங்கள் இயங்குகின்றன. ஆனால் அப்படியான நிலையங்களை பல சிங்களவர்கள் நடத்திவருகிறபோதும் ஒரு முஸ்லிம் அகப்பட்டுவிட்டால் அது முஸ்லிம் சமூகத்தின் திட்டமிட்ட சதியாக புனையப்பட்டு பெரும் பிரச்சாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதுபோலத் தான் போலி மருந்து விற்பனை நிலையங்களும்.

இந்த விளம்பரங்களைப் பாருங்கள். ஒரே நாளில் (13.07.2019) வெளிவந்த அறிவித்தல்கள் இவை. இப்போதெல்லாம் நீதிமன்றங்களே தீர்ப்பின் அங்கமாக குற்றமிழைத்தவர்களை "பொதுமன்னிப்பு அறிவித்தலை" பகிரங்க ஊடகங்களின் வழியாக செய்யும்படி கட்டளையிடுகின்றன. இப்படியான அறிவித்தல்களை சிங்கள சமூகத்தவர் செய்ததாக பார்த்ததில்லை. சிலவேளை சிங்கள சமூகத்தவரும் எங்காவது மன்னிப்பு கோரியிருக்கலாம். ஆனால் இப்போது நிகழ்பவை விரிவாக ஆராயப்படவேண்டியவை.



குறிப்பாக சமகால நெருக்கடி சூழல், சிங்கள பௌத்த மனோநிலையை திருப்திபடுத்த நிறுவனமயப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பு எடுத்துவரும் நடவடிக்கைகள்

தமிழில் தினகரன் பத்திரிகையில் வெளிவந்த அறிவித்தல் இது.2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை சட்டத்தின் 131ஆம் பிரிவின் கீழாக மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளை பிரகாரம், இலங்கை பொது மக்களிடம் மன்னிப்பு கோரல் மாத்தறை, சம்போதி மாவத்தை , இலக்கம் 29இல் வதியும் ஏ.எஸ். எம் நிஸார் ஆகிய நான், மாத்தறை, புதிய தங்காலை வீதி, இலக்கம் 238பீ என்ற முகவரியில் அமைந்துள்ள சென்ட்ரல் பாமசி எனப்படும் மருந்து விற்பனை நிலையத்தின் உரிமையாளராவேன். மேற்படி மருந்து விற்பனை நிலையத்தில், தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளாது, நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotics) மற்றும் பாலியல் தூண்டிகளை (Sex Stimylants) களஞ்சியப்படுத்திய தவறுக்கு, வழக்கு இலக்கம் 86225 கீழாக தொடரப்பட்ட வழக்கில் நான் குற்றவாளியாகக் காணப்பட்டால், மாத்தறை மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் மூலம் ரூ.100,000.00 அபராதம் விதிக்கப்பட்டு, அதைச் செலுத்தத் தவறினால் 06 மாதகால சிறைத்தண்டனையொன்று விதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன். இந்த தவறை நான் மீண்டும் இழைக்க மாட்டேன் என உறுதியளிப்பதோடு, குற்றம் புரிந்தமை தொடர்பில் இலங்கை பொது மக்களிடம் மன்னிப்பும் கோருகின்றேன்.இதே அறிவித்தல் நேற்றைய தினம் வெளியான சிங்கள தினமின பத்திரிகையிலும், ஆங்கில டெயிலி நியூஸ் பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது. அதே சிங்களப் பத்திரிகையில் மேலும் சிங்களத்தில் மொஹமத் சாலி மொஹமத் என்கிற ஒருவர் "கருத்தடை" மருந்துகளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு மன்னிப்பு கோரும் ஒரு அறிவித்தலும் வெளியாகியிருக்கிறது. சிங்கள செய்திகளை காணும் போது இது போன்ற வழக்குகள் பல நிலுவையில் இருப்பதாக அறிய முடிகிறது.

எனவே இனி வரும் நாட்களில் இப்படி பொது மன்னிப்பு அறிவித்தல்கள் தொடர்ச்சியாக ஊடகங்களில் வெளியாக வாய்ப்புகள் உண்டு.

இப்படியான அறிவித்தல்கள் இன்னொருபுறம் சிங்கள சமூகத்தில் முஸ்லிம்கள் பற்றிய புனைவுகளை உறுதிபடுத்தும் ஒன்றாகவே அமையப்போகின்றன என்பது உறுதி. குற்றம் செய்யும் அனைத்துக் குற்றவாளிகளும் நீதிமன்றங்களால் இப்படித்தான் ஊடகங்களில் பொதுமன்னிப்பு அறிவிப்பை செய்யும்படி கட்டளையிடப்படுகின்றனவா? ஏன் குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டும் ஏன் குறிப்பிட்ட குற்றசெயல்கள் மட்டும் இந்த இலக்குக்கு ஆளாகின்றனர்?

இன்னொன்றையும் கவனியுங்கள் சிங்களத்தில் மாத்திரம் ஏனையவற்றைப் போல ஒரு சாதாரண அறிவித்தலாக இல்லாமல் வடிவைக்கப்பட்டு பெயரையும், குற்றத்தையும் தனியாக பெரிய எழுத்தில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். தினமின பத்திரிகையில் வெளியான ஏனைய பொது அறிவித்தல்களுடன் நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பக்கலாம்.

### இனப்பெருக்க இயக்கம்

முஸ்லிம்கள் திட்டமிட்டு தம்மினத்தை பெருக்குவதும் ஏனைய இனங்களின் இனப்பெருக்கத்தை தடுக்கும் திட்டமிட்ட சதியில் இறங்கியிருக்கிறது என்கிற பிரச்சாரம் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் கணிசமான அளவுவெற்றி பெற்றிருக்கிறது என்று தான் கூற வேண்டும். இந்தப் பிரச்சாரங்களை முடுக்கிவிடுவதில் ஊடகங்கள், சிவில் அமைப்புகள், பௌத்த நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அரச அதிகாரிகள் என பரந்துபட்ட சக்திகள் கருமமாற்றி வருகின்றன. இன்று இந்த கருத்தாக்கம் நிருவனமயப்படுத்தப்பட்டிருக்கிறது.இதன் வேடிக்கையான நீட்சி என்னவென்றால் இப்போது சிங்களவர்கள் தமது இனப்பெருக்கத்தை அதிகரிக்கவேண்டும் என்கிற ஒரு பிரச்சாரமும், அதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. "சிங்கள தறுவன் வவமு" (சிங்கள குழந்தைகளை உருவாக்குவோம்) என்கிற ஒரு இயக்கமே இதற்காக இப்போது தொடக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்துக்கென இணையத்தளம் (http://sinhaldaruwan.com), முகநூல் பக்கம் (https://www.facebook.com/SinhalaDaruwan/

எல்லாம் இருக்கிறது.

சிங்கள குடும்பமொன்றில் பிறக்கும் நான்காவது குழந்தைக்கு 50,000 ரூபாயும், ஐந்தாவது குழைந்தைக்கு 100,000 ரூபா பணமும் வெகுமதியாக வழங்கப்படுகிறது. இப்படி சிங்கள இனத்தைப் பெருக்கும் குடும்பங்களுக்கு இந்த வெகுமதியை வழங்க சிங்க பௌத்த தனவந்தர்களை முன்வரும்படியும் தாம் ஒரு எற்பாட்டாளர்களே என்றும் அவ்வமைப்பு தமது பிரச்சாரங்களில் வெளியிட்டு வருகிறது.

இந்த அமைப்பு குறித்து கடந்த யூலை 14 ஞாயிறு அன்று திவயின பத்திரிகையில் வெளியான கட்டுரையில்

"சிங்கள இனத்தை காக்க சிங்களவர்கள் கைகொடுக்காமல் உலகில் வேறெவர் கைகொடுக்கப் போகிறார்கள். ஒரு இனம் என்கிற வகையில் ஏற்கெனவே நாம் அதிகம் தாமதித்திருக்கிறோம். இப்போதாவது சரியான நடவடிக்கையில் இறங்காவிட்டால் இந்த நிலைமையை சரி செய்ய முடியாமல் போய்விடும். இல்லையென்றால் நாம் பிறந்த நாட்டில் எமது உரிமையை நிலைநாட்ட வேண்டிய பெரிய இனம்; சிறுபான்மை இனமாகிவிடும். ஜிஹாத் எனப்படுவது வெறுமனே குண்டு வைப்பது மட்டுமல்ல.... முன்னரெல்லாம் ஒரு சிங்கள குடும்பத்தில் குறைந்தது ஐவர் இருந்தனர். அளவான குடும்பமே பொன்னான குடும்பம் என்கிற கருத்தாக்கத்தை விதைத்து நமது குடும்ப அலகை சிதைத்து விட்டார்கள். நாட்டின் பெரும்பான்மை இனம் "அளவான" குடும்பத்தை அமைக்கும்போது ஏனைய இனங்கள் ஐந்தாறு பேரைக்கொண்ட குடும்ப கலாசாரத்தைக் கட்டியெழுப்பினார்கள். அதிவேகமாக அவர்களின் இனத்தை பெருக்கித் தள்ளினார்கள். இதைத் தான் நவீன ஆக்கிரமிப்பு என்கிறோம்.... இப்போதிருந்தே அதிக குழந்தைகளை பெற்றெடுத்தால்தான் எதிர்காலத்தில் இன விகிதாசாரத்தின் சமநிலையை நாங்கள் பேண முடியும்.

நிறுவனமயப்பட்ட பேரினவாதம் இனப்பெருக்கம் குறித்த பீதியில் தமக்கான சவக்குழியை தாமே தோண்டிக்கொண்டிருக்கிறது. இனப்பெருக்கத்தை செயற்கையாக திட்டமிட்டு பெருக்குமுன் உலக ஜனப்பெருக்க வேகத்துக்கு ஈடுகொக்கமுடியாமல் உலகின் வளப்பற்றாகுறையை அதற்கேற்ப சரி செய்ய முடியாமல் சிக்கித் தவிக்கும் உலகப் போக்கைப் பற்றிய சிந்தனை சிறிதும் இல்லாமல் வெறும் "இனத்துவ" போபியா (phobia) மனநிலையிலிருந்து முடிவுகளை எடுக்கிறது பேரினவாதம்.

# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 7




## புத்த பிக்குவாக மேடையில் தோன்றிய தோப்பூர் ஹயாத்து மூமீன்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்)*

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "மச்சான் மௌனகுரு எப்படியிருக்கிறீர்கள் நான்தான் ஹயாத்து முகம்மது வந்தாறுமூலை விடுதி வாழ்க்கை ஞாபகம் இருக்கிறதா?"

சட்டென எனக்கு பழைய ஞாபகங்கள் நிழற்படம் என ஓடின. பாடசாலையில் சாம்ராட் அசோகன் நாடகத்தில் சீவர ஆடை அணிந்து மொட்டைத் தலையுடன் பிட்சாபாத்திரம் ஏந்தி மேடையில் தோன்றிய அந்த ஹயாத்து மோமீனின் உருவே சட்டென எனக்கு ஞாபகம் வந்தது.

1953 தொடக்கம் 1959 வரை வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் படித்த காலத்தில் நாடகத்தினால் நான் அனைவர் மத்தியிலும் பிரபல்யமாகி இருந்தேன்.

1958 இல் எமது பாடசாலைக்குப் புதிய ஒரு அதிபர் வந்திருந்தார். அவர் யாழ்ப்பாணத்தவர், பெயர் சவரிமுத்து அன்றைய எம் ஏ பட்தாரி.

அவர் முன் கருணாநிதி எழுதிய சோக்கிரடீஸ் நாடகத்தில் சோக்கிரடீஸாக நடித்து கமலநாதன் எனும் ஒரு சீனியர் மாணவன் பிரபல்யமானான். எனக்குப் போட்டியாக இன்னொருவர். இதனால் அதே கருணாநிதி எழுதியதும் ராஜாராணி படத்தில் வந்ததுமான மற்றிரண்டு நாடகங்களுள் ஒன்றான சாம்ராட் அசோகனையோ அல்லது சேரன் செங்குட்டுவனையோ நான் நடித்து கமலனாதனை விடச் சிறந்த நடிகன் என்பதனைச் சவரிமுத்து அதிபருக்குக் காட்ட வேண்டும் என்று அன்று என் மனம் விரும்பியது.

அதன் விளைவே தவணை இறுதியில் நான் நடித்த சாம்ராட் அசோகன் நாடகம்.

இந் நாடகத்தில் அசோகனாக நான் நடித்தேன். அசோகனைத் திருத்தும் பௌத்த பிக்குவாக ஹயாத்து மூமீன் நடித்தான். ஹயாத்து மூமீன் மூதூரைச் சேர்ந்தவன்.

5ஆம் வகுப்பு ஸ்கொலர்சிப் சித்தியடைந்து என்னுடன் கூட ஒன்றாக வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் சேர்ந்தவன்.

ஒன்றாகத்தான் 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்பு வரை படித்து வந்தோம். சிறந்த உதைபந்தாட்ட வீரன். அழகாக உடுத்திக்கொள்வான். அடிக்கடி தன் காற்சட்டையினைத் தட்டிவிட்டபடி நடந்து செல்வான்.

அவனைச் சுற்றி கம கமவென மணம் கமழும் அத்தர், பௌடர் என்பன வைத்திருந்தான்.

ஆஜானுபாகுவானவன். அதனால் அவனோடு எம் வயதினர் முண்டச் சிறிது தயங்கினோம். ஒரு நாள் என்னை விட மூத்தவரானவரும் இராஜராஜ சோழன் நாடகத்தில் இராஜராஜ சோழனுக்கு நடித்தவருமான சிவராஜா அண்ணரோடு விளையாட்டாக ஒரு மல் யுத்தப் போட்டியில் நான் மோதிய மோதலில் தோற்றுப்போனேன். எனினும் என்னை முதன் முதலில் வந்து பாராட்டியன் இவனே.

என் துணிச்சலை அவன் பாராட்டினான். அன்றிலிருந்து நாங்கள் நல்ல நண்பர்களானோம்.

எனது நாடகங்களை, எனது நடிப்பை நன்கு ரசிப்பவன். அவனுக்கும் நடிக்க ஆசை. "உங்கள் நாடகங்களில் எனக்கும் ஒரு வேடம் தரவேண்டும்" என்று அடிக்கடி என்னைக் கேட்டு வந்தான்.

அவனுடைய சிறிது முரட்டுத்தனத்தினால் அவனோடு அதிகம் சேராதிருந்த எனது நாடக நண்பர்களுக்கு எமது நாடகக் குழுவோடு அவனை சேர்த்துக் கொள்ள இஸ்டமிருக்கவில்லை.

எனினும் நான் அவனை சாம்ராட் அஸோகனில் சேர்த்துக் கொண்டேன். அவனுக்கு அந்த நாடகத்தில் அசோகனைத் திருத்தும் புத்த பிக்கு வேடம்.

இஸ்லாமிய மாணவர்கள் வேசம் போட்டு நடிப்பதா என்ற இன்றைய கூக்குரலகள் எதுவும் அன்று இருக்கவில்லை.

ஒத்திகைகள் ஒழுங்காக நடந்தன. ஹயாத்து மூமீன் புத்த பிக்குவானான்.

மஞ்சள் நிற பலூனை இரண்டாக்கி அவன் தலையை மூடி அவன் தலையை மழித்த தலையாக்கினோம்.

சீவர ஆடை அணிந்து மழித்த தலைக் கோலத்துடன் முரடன் எனப் பெயர் எடுத்த ஹயாத்து மூமீன் புத்த பிக்கு வேடத்தில் மேடைக்கு வந்தபோது சிரிப்பாகத்தான் இருந்தது.

நன்றாக வசனம் பேசி நடித்தான் ஹயாத்து மூமீன். நாடகத்தில் புத்த பிக்குவாக தோன்றினான் ஹயத்து மூமீன்.

புத்தம் சரணங் கச்சாமி தர்மம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி என்று சொல்லிய வண்ணம் அவன் யுத்த களத்தில் தோன்றி, யுத்ததினால் ஏற்படும் அவலத்தை சாம்ராட் அசோகனுக்கு எடுத்து உரைத்து இறுதில் போகும் போது அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலக ஜோதி, அன்புதுதான் உலக மஹாசக்தி என்று கூறிச்சென்றான்



'மச்சான் உன்னைச் சந்திக்க ஆசையாய் இருக்குதடா' எனக் கூறிய அவன் சென்ற வருடம் ஒரு நாள் என் வீட்டுக்கே வந்து விட்டான்.

அவன் தோற்றமே மாறி இருந்தது நீண்ட வெள்ளை ஜிப்பா நீண்ட தாடி தப்லீக் இயக்கத்தின் முக்கியஸ்தனாக இருந்து தீவிர சமயப்பணியும் சமூகப்பணியும் செய்வதாகச் சொன்னான். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம் இஸ்லாம் பற்றி நான் பேசிய விடயங்கள் அவனை வியப்பிலாழ்த்தின

இவையெல்லாம் படித்திருகிறாயா என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

நம்மோடு உடனுறையும் அனைத்தையும் அறிந்து வைத்தல் நல்லதுதானே மூமீன் என்று கூறினேன்.

தொழுகை நேரம் வந்து விட்டது எனக்கூறி எனது மனைவியிடம் ஒரு பாய் வாங்கி அதன் மீதிருந்து தொழுதான்.

அவன் தொழுது கொண்டிருக்கும் தோற்றம் பார்த்தேன் ஆழ்ந்து அமிழ்ந்து உருகி அல்லாஹ்வை வேண்டிக்கொண்டிருந்தான். தன்னை மறந்த நிலையில் இருந்தான், அந்த ஆழமான வேண்டுதல் என்னை மிகவும் கவர்ந்தது.

இப்படி நான் அவனை முன் ஒருபோதும் கண்டதில்லை அந்த முரட்டுக் ஹயாத்து மூமீனா இவன்? காலம் என்னமாக மாற்றியிருக்கிறது.

60 வருடங்களுக்கு முன்னர் அவன் புத்த பிக்கு வேடத்தில் தோன்றி புத்தம் சரணங்கச் சாமி ஸ்தோஸ்திரம் சொல்லி அசோக மன்னனைத் திருத்திய அந்த ஹயாத்து மூமீனின் தோற்றமும் தவிர்க்க முடியாமல் மனதில் தோன்றியது.

## பெருமை கொண்டோம் எவரோவாய் வாழ.........

**சி ஜெயசங்கர்**

நீலி சூலி திரிசூலி பிடாரி
மாரி காளி கருமாரி
மற்றும்பிற சாமிகளே!
தெய்வங்களே!!
கவனியுங்கள்!

'ஆய்' போட்டு ஆட்டம் போட்டு
கட்டாடி மந்திரம் மன்றாட்டு
சாட்டை சடங்குகள்
பள்ளயங்கள் ஏதும்
உமக்கினி இல்லைப்போம்.
ஓயுங்கள் ஒடுங்குங்கள்
'ம்' கொட்டி அடங்குங்கள்

'ஸ்ரீ' போட்டு
உங்கள் பெயர்மாற்றி
உடை மாற்றி உருமாற்றி
எல்லாம் ஆயிற்று
அம்மானை காவியம் தெம்மாங்கு
ஊஞ்சலென அழகுதமிழ்
வாழ்த்தும்

வழிபாடும் இனியில்லை
செவி நுகர்ந்து மனங்குளிர
இனித் தமிழே இல்லை
தமிழிலே எதுவுமில்லை
ஓடுங்கள் ஒடுங்குங்கள்
குருகுலங்கள் தேடுங்கள்
சமஸ்கிருதம் கற்றுத் தேறுங்கள்
தமிழிலேனும் அதையெழுதிப்
படியுங்கள்.

பெரிய ஐயா வருகிறார்
சமஸ்கிருதம் அறியா எம்
அவாக்கள் அந்தரங்கள்
உமக்கறிவிக்க அவர்
சமஸ்கிருத மந்திரம் புனைந்து
எமக்காய் உமக்கவர் ஓதுவார்
அது புரிந்து எமக்கேதும் அருள
ஓடுங்கள் ஒடுங்குங்கள்
குருகுலங்கள் தேடுங்கள்

சமஸ்கிருதம் கற்றுத் தேறுங்கள்
தமிழிலேனும் அதையெழுதிப்
படியுங்கள்.

'ஸ்ரீ' போட்டு
உங்கள் பெயர்மாற்றி
உடைமாற்றி உருமாற்றி
எல்லாமே ஆயிற்று.
பெருமை கொண்டோம்
எம்மை புதைத்து
எவரோவாய் வாழ



# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ணம் 2019

### கிரிக்கட்டின் தாயகத்தின் 44 வருட தாகம் தீர்ந்தது. விறுவிறுப்பான இறுதிப் போட்டியுடன் விடை பெற்ற உலகக் கிண்ணம்



**யாசீர் அரபாத்**

12ஆவது உலகக் கிண்ண கிரிக்கட் தொடரின் சம்பியனாக கிரிக்கட்டின் தாயகமான இங்கிலாந்து அணி தெரிவாகி தமது 44 வருட உலகக் கிண்ண கனவினை நனவாக்கியது. கிரிக்கட் விளையாட்டினை அறிமுகப்பபடுத்திய இங்கிலாந்து அணி இதற்கு முன்னர் இடம்பெற்றிருந்நத 11 உலகக் கிண்ணத் தொடர்களிலும் பங்கு பற்றி அவற்றில் மூன்று உலகக் கிண்ண தொடர்களில் இறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகி மூன்றிலும் தோல்வியடைந்த நிலையில் கிண்ணம் வெல்லும் கனவுடனேயே இம் முறை சொந்த மண்ணில் கடந்த மே மாதம் ஆரம்பமான உலகக் கிண்ண தொடருக்கு களமிறங்கியிருந்தது.



ஓயின் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி லீக் சுற்று போட்களின் முடிவில் 12 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தை பெற்று அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலயா அணியை 8 விக்கட்டுக்களால் வீழ்த்தி இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை லண்டன் லோட்ஸ் மைதாணத்தில் எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தமது அணியை முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. நியூசிலாந்து அணி சார்பாக ஹென்றி நிகோல்ஸ் 55 ஓட்டங்களையும் விக்கட் காப்பாளர் லெதம் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் க்ரிஸ் வோக்ஸ் மற்றும் ப்ளங்கட் ஆகியோர் வலா 3 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

242 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்த அணி ஆரம்பத்தில் விக்கட்டுக்களை பறிகொடுத்து ஒருகட்டத்தில் 86 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களை இழந்து தடுமாறிய வேளையில் ஐந்தாவது விக்கட்டுக்காக ஜோடி சேர்ந்த பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர் ஆகியோர் 110 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியின் வெற்றிக்காக போரடினர். பட்லர் ஆட்டமிழந்ததையடுத்து பின்னர் வந்த ஏனைய வீரர்களும் தமது விக்கட்டுக்களை பறிகொடுக்க மறுபக்கம் பென் ஸ்டோக்ஸ் மாத்திரம் வெற்றிக்காக தனியாக போராடிக்கொண்டிருக்க இறுதியில் இங்கிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு கடைசி ஓவரில் 15 ஓட்டங்களை பெற வேண்டிய நிலை காணப்பட்டது.



நியூசிலாந்து அணி சார்பாக இறுதி ஓவரை ட்ரன்ட் போல்ட் வீசினார். மறுமுனையில் பென் ஸ்டோக்ஸ், முதலிரண்டு பந்துகளிலும் ஓட்டமெதனையும் பெறாமல் நான்கு அல்லது ஆறு ஓட்டங்களை மாத்திரமே பெறும் முனைப்போடு துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்தார். மூன்றாவது பந்துக்கு ஆறு ஓட்டங்களை பெற போட்டியின் விறுவிறுப்பு அதிகமானது. 3 பந்துகளுக்கு 9 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் நான்காவது பந்தில் 2 ஓட்டங்கள் பெற முற்படும் போது களத்தடுப்பில் ஈடுபட்ட மார்டின் குப்டில் வீசிய பந்து துடுப்பாட்ட வீரரின் துடுப்பில் பட்டு எல்லைக் கோட்டை கடந்து மேலதிகமாக 4 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க இங்கிலாந்து அணிக்கு அதிர்ஷ்ட வசமாக 6 ஓட்டங்கள் கிடைத்தது. பின்னர் 2 பந்துகளுக்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட ஐந்தாவது பந்தில் ஒரு ஓட்டத்தினை பெற்று ரன் அவுட் மூலம் ஒரு விக்கட்டும் வீழ்த்தப்பட போட்டியானது விறுவிறுப்பின் உச்ச கட்டத்தை அடைந்து இறுதிப் பந்தில் 2 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் துடுப்பாட்ட வீரர்கள் ஒரு ஓட்டத்தினை கடந்து இரண்டாவது ஓட்டத்தினை பெற முயலும் போது ரன் அவுட் மூலம் ஆட்டமிக்க போட்டியானது சம ஓட்ட எண்ணிக்கையில் முடிவுற்று வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சுப்பர் ஓவர் முறை பயன்படுத்தப்பட்டது.

### பரபரப்பான சுப்பர் ஓவர்



சுப்பர் ஓவர விதிமுறைக்கமைய இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட துடுப்பாட்ட வீரர்களாக பென் ஸ்டோக், ஜோஸ் பட்லர் ஆகியோரை களமிறக்கியது. நியூசிலாந்து அணி சார்பாக ட்ரென்ட் போல்ட் பந்தினை வீசினார். 6 பந்துகளிலும் மொத்தமாக 15 ஓட்டங்களை இங்கிலாந்து அணி பெற்றுக்கொண்டது. 16 ஓட்டங்களை இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணி சார்பாக ஜிம்மி நீஷம் ஆகியோர் களமிரங்க பந்தினை வீசுவதற்காக இங்கிலாந்து அணி சார்பாக ஜோப்ரா ஆர்ச்சர் அழைக்கப்பட்டார். முதல் 5 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம் அடங்களாக ஜிம்மி நீஷம் 14 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க இறுதிப் பந்துக்கு 2 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் மார்டின் குப்டில் துடுப்பெடுத்தாடி இரண்டாவது ஓட்டத்தை பெற முயன்ற வேளையில் ரன் அவுட் மூலம் ஆட்டமிழக்க சுபர் ஓவரும் சமநிலையில் முடிந்தது.

### சம்பியனை தீர்மானித்த பௌன்டரிகள்




போட்டிகள் இரண்டும் சமநிலையில் முடிவடைய கிரிக்கட் விதி முறைகளுக்கமைய வெற்றியாளரை தீர்மானிக்கும் முறையான அணிகள் பெற்றுக்கொண்ட பௌன்டரிகளின் எண்ணிக்கைக்கு அமைய 27 பௌன்டரிகளை பெற்ற இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. தோல்வியடையாவிட்டாலும் துரதிஸ்டவசமாக நியூசிலாந்து அணி கிண்ணம் வெல்லும் வாய்ப்பை பரிதாபமாக இழந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக பென் ஸ்டோக் தெரிவானதோடு தொடரின் சிறப்பாட்டக்காரராக தொடரில் 578 ஓட்டங்களை பெற்று அணியை இறதிப் போட்டிவரை கொண்டு சென்ற நியூசிலாந்து அணித் தலைவர் கேம் வில்லியம்சன் தெரிவானார். தொடரில் அதிகபட்சமாக இந்திய அணியின் ரோஹித் சர்மா 648 ஓட்டங்களை பெற்றக்கொண்டதோடு அவுஸ்திரேலியா அணியின் மிட்சல் ஸ்டார்க் 27 விக்கட்டுக்களையும் கைப்பற்றினார்.

## ஆசியாவின் துயரம்

**சின்னராஜா விமலன்**

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரைப் பொறுத்தவரையில் ஆசியா சார்பில் 1983 ஆம் ஆண்டு இந்தியாவே முதல் தடவையாக கிண்ணம் வென்றிருந்தது. அதேசமயம் 1987 நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடருக்கு எந்தவொரு ஆசிய அணியும் இறுதிப் போட்டிக்கு முன்னேறவில்லை. ஆனால் 1992 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய பிற்பாடு தொடர்ச்சியாக 1996 இல் இலங்கை கிண்ணத்தைக் கைப்பற்றி இருந்தது. ஆனாலும் 1999 இல் பாகிஸ்தானும் 2003 இல் இந்தியாவும் 2007 இல் இலங்கையும் கிண்ணங்களை வெல்லாவிட்டாலும் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்தமை ஆசியக் கிரிக்கெட்டின் சிறப்பான தருணங்களாகும்.
இதன் உச்சமாக 2011 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவும் இலங்கையும் விளையாடி இருந்ததை குறிப்பிட்டுச் சொல்லலாம். இருப்பினும் 2015 இலும் சரி 2019 இலும் சரி தொடர்ச்சியாக ஆசிய நாடு ஒன்று கூட இறுதிப் போட்டிக்கு முன்னேறாதது துரதிஸ்டவசமானது. இம்முறை இந்தியாவிற்கான இறுதிப்போட்டி வாய்ப்பு பிரகாசமாக இருந்தாலும் அதுவும் அரையிறுதியோடு இல்லாமல் போய்விட்டது.



இதில் என்ன துயரம் என்றால் ஏனைய நாடுகளுக்கு இல்லாத கிரிக்கெட் சார்ந்த ஒரு தனிக்கட்டமைப்பு ஆசிய நாடுகளுக்கு இருந்தும் இத்தகைய பின்னடைவை அவை சந்தித்ததுதான். அந்தவகையில் ஆசிய நாட்டு கிரிக்கெட் சபைகளின் கூட்டமைப்பாக விளங்கும் 'ஆசிய கிரிக்கெட் பேரவை' ஆசிய நாடுகளின் கிரிக்கெட் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் செய்து வருகின்றது.

குறிப்பாக கடந்த 3 வருடங்களை நோக்குவோமாயின் 2016 இருபதுக்கிருபது உலகக் கிண்ணத் தொடரைக்



கருத்திற்கொண்டு 2016 ஆசியக்கிண்ணத் தொடரை இருபதுக்கிருபது தொடராக நடத்தியதையும் 2019 உலகக் கிண்ணத் தொடரைக் கருத்திற்கொண்டு 2018 ஆசியக் கிண்ணத்தை ஒருநாள் தொடராக நடத்தியதையும் நினைவு கூரலாம். அது



மாத்திரமல்லாமல் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகப் பாகிஸ்தானுக்கு சர்வதேச அணிகள் சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதற்குப் பின்னடித்து வரும் நிலையில் கடந்த 2017ஆம் ஆண்டு ஆசிய கிரிக்கெட் பேரவை தலைவராக திலங்க சுமதிபால இருந்தபொழுது இலங்கைஅணியை பாகிஸ்தானுக்கு இருபதுக்கிருபது போட்டிகளுக்காக விளையாட அனுப்பியதையும் சுட்டிக்காட்டலாம். இதற்கும் மேலாகச் சில செயற்பாடுகளையும் ஆசிய கிரிக்கெட் பேரவை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் ஆசிய கிரிக்கெட் பேரவை சுதந்திரமாகச் செயற்படுவதில் அந்தந்த கிரிக்கெட் சபைகளில் நிலவிய அரசியல் தலையீடுகள் ஒருவகையில் காரணம் என்பதையும் மறுக்க முடியாது. எனவே இரண்டு உலகக் கிண்ணத் தொடர்களில் ஏற்பட்ட பின்னடைவுகள் எதிர்வரும் நாட்களில் ஒவ்வொரு நாட்டின் கிரிக்கெட் சபைகளிலும் தாக்கத்தைச் செலுத்தி அதிரடி மாற்றங்களுக்கு வழிகோலும் எனலாம். அத்தகைய மாற்றங்கள் உருவாக்கும் சாதகமான சூழலே ஆசிய கிரிக்கெட் பேரவையின் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக அமைந்து ஆசிய கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கும் உதவும் என்று நம்பலாம்

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

### பல்காரணிக் கலப்புகளில் (multifactorial crosses) தலைமுறையுரிமைக் கோலங்களின் எதிர்வுகூறல்

ஒரு பிறப்புரிமையியலுக்குரிய கலப்பின்போது இரண்டு அல்லது அதிலும் கூடிய இயல்புகளின் தலைமுறையுரிமைக் கோலங்கள் பின்தொடர்ந்து அவதானிக்கப்பபடுதல் பல்காரணிக்கலப்பு என அழைக்கப்படலாம்.

ஒரு புன்னற் சதுரத்தினூடாக ஒரு பல்காரணிக் கலப்பின் பெறுபேறுகளைக் கண்டுபிடித்தல் ஒரு கடினமான காரியமாக இருக்கலாம். ஆகவே நிகழ்தகவு விதிகளைக் பிரயோகித்தல் ஒரு பல்காரணிக் கலப்பின் பெறுபேறுகளை எதிர்வுகூறுவதற்குப் பயனுள்ளதாக அமையலாம். ‘

தனிப்படுத்துகை விதியின் பிரகாரம், ஒரு பல்காரணிக்கலப்பு சம காலத்தில் நிகழும் பன்மடங்கு சுயாதீன ஒருகலப்புப்பிறப்பு கலப்புகளுக்குச் சமமானது எனக் கருதப்படலாம்.

உதாரணம் 1: வித்தின் நிறத்திற்கும் வடிவத்துக்குமான துவிக்கலப்புப்பிறப்பு இனங்கலத்தல் வித்தின் நிறத்திற்கான நிகழ்தகவுகள் (ஒருகலப்புப்பிறப்பிற்கான புன்னற்சதுரத்தின் அடிப்படையில் அமைந்தது)

| வித்துநிறம் | |
|---|---|
| பிறப்புரிமையமைப்பு | நிகழ்தகவு |
| BB | ¼ |
| Bb | ½ |
| bb | ¼ |

| வித்துவடிவம் | |
|---|---|
| பிறப்புரிமையமைப்பு | நிகழ்தகவு |
| RR | ¼ |
| Rr | ½ |
| rr | ¼ |

B: கறுப்பு நிற வித்துகளுக்கான ஆட்சியுடைய எதிருரு. b: கபில நிற வித்துகளுக்கான பின்னிடைவான எதிருரு
R: வட்டமான வித்துகளுக்கான ஆட்சியுடைய எதிருரு. r: திரங்கிய வித்துகளுக்கான பின்னிடைவான எதிருரு

F2 சந்ததியில் பிறப்புரிமையமைப்புகள் ஒவ்வொன்றினதும் நிகழ்தகவானது. பெருக்கல் விதியைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படலாம்.

Bb Rr இன் நிகழ்தகவு = ½ (Bb யின் நிகழ்தகவு) x ½ (Rr இன் நிகழ்தகவு) = 1/4
bbRr இன் நிகழ்தகவு = ¼ (bb) x ½ (Rr) = 1/8
bb rr இன் நிகழ்தகவு = ¼ (bb) x ¼ (rr) = 1/16

உ.ம். 2: பூவின் நிறம், வித்தின் நிறம் மற்றும் வித்தின் வடிவம் ஆகியவற்றிற்கான ஒரு முக்கலப்புப்பிறப்பு இனங்கலத்தல் ( trihybrid Cross)

Y:மஞ்சள் நிற அல்லிகளுக்கான ஆட்சியுடைய எதிருரு. y: வெள்ளைநிற அல்லிகளுக்கான பின்னிடைவான எதிருரு
B:கறுப்பு நிற வித்துக்களுக்கான ஆட்சியுடைய எதிருரு.b: கபில நிற வித்துக்களுக்கான பின்னிடைவான எதிருரு
R:வட்டமான வித்துக்களுக்கான ஆட்சியுடைய எதிருரு. r: திரங்கிய வித்துகளுக்கான பின்னிடைவான எதிருரு.
YyBbRr x yyBbrr

(YyBbRr): கறுப்புநிற வட்ட வித்துகளோடு கூடிய மஞ்சள் நிற அல்லிகள்
(yyBbrr): கறுப்புநிற வட்டமான வித்துகளோடு கூடிய வெள்ளைநிற அல்லிகள்.

| பூவின் நிறம் | |
|---|---|
| பிறப்புரிமையமைப்பு | நிகழ்தகவு |
| YY | 0 |
| Yy | ½ |
| yy | ½ |

| வித்தின் நிறம் | |
|---|---|
| பிறப்புரிமையமைப்பு | நிகழ்தகவு |
| BB | ¼ |
| Bb | ½ |
| bb | ¼ |

| வித்துகளின் வடிவம் | |
|---|---|
| பிறப்புரிமையமைப்பு | நிகழ்தகவு |
| RR | 0 |
| Rr | ½ |
| rr | ½ |

அறியப்படாத பட்டாணித்தாவரத்தின் பிறப்புரியைமைப்பு TT எனக் கொள்க.
மேலேயுள்ள இனக்கலப்பின் பெறுபேறாக F1 சந்ததியில் 640 தாவரங்கள் கிடைத்தன. குறைந்தது இரண்டு இயல்புக்கு ஆட்சியுடைய தோற்றவமைப்பைக் காண்பிக்கும் தாவரங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்க.

1.மேலுள்ள நிபந்தனைகளுக்கு அவற்றின் தனித்தவமான நிகழ்தகவுகளுடன் கூடிய சாத்தியமான பிறப்புரிமையமைப்புக்கள்
YyBBRr: 1/2(Yy இன் நிகழ்தகவு) x 1/4 ( BB) x 1/2 (Rr)= 1/16
YyBbRr: 1/2 x 1/2 x 1/2 = 1/8
YyBBrr: 1/2 x 1/4 x 1/2= 1/16
YyBbrr: 1/2 x 1/2 x 1/2 = 1/8
YybbRr: 1/2 x 1/4 x 1/2 = x/16
yyBbRr: 1/2 1/2 x 1/2 = 1/8
yyBBRr 1/2 x 1/4 x 1/2 = 1/16

2.குறைந்தது இரண்டு ஆட்சியான இயல்புகளை காட்சிப்படுத்தும் நிகழ்தகவு = 1/16+ 1/8+ 1/16+ 1/8+ 1/16+ 1/8+ 1/16 =10/16 =5/8

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

சென்ற வாரவிடை :

05. $3 - \frac{2}{5}x = 7$ (இருபக்கங்களிலிருந்தும் 3ஐக் கழிக்குக.)

$$\frac{-2}{5}x = 4$$

$$\frac{-2}{5}x \times 5 = 4 \times 5$$ (இருபக்கங்களையும் 5ஆல் பெருக்குக.)

$$-2x = 20$$

$$\frac{-2x}{-2} = \frac{20}{-2}$$ (இருபக்கங்களையும் -2ஆல் வகுக்குக)

$$x = (-10)$$

06. $2(x+1) = 4$

$\frac{2}{2}(x+1) = \frac{4}{2}$ (இருபக்கங்களையும் 2ஆல் வகுக்குக)

$(x+1) = 2$

$x + 1 - 1 = 2 - 1$ (இருபக்கங்களிலிருந்தும் 1ஐக் கழிக்குக.)

$x = 1$

07. $3(2x-3) = 15$

முறை I

$3 \times 2x - 3 \times 3 = 15$ (அடைப்புக் குறிக்குள் உள்ளதை 3ஆல் பெருக்குக.)

$6x - 9 = 15$

$6x - 9 + 9 = 15 + 9$ (இருபக்கங்களிலிருந்தும் 9ஐக் கூட்டுக.)

$6x = 24$

$\frac{6x}{6} = \frac{24}{6}$ (இருபக்கங்களையும் 6ஆல் வகுக்குக)

$x = 4$

முறை II

$3(2x-3) = 15$ (இருபக்கங்களையும் 3ஆல் வகுக்குக)

$2x - 3 = 5$

$2x - 3 + 3 = 5 + 3$ (இருபக்கங்களிலிருந்தும் 3ஐக் கூட்டுக.

$2x = 8$

$\frac{2x}{2} = \frac{8}{2}$ (இருபக்கங்களையும் 2ஆல் வகுக்குக

$x = 4$

தொடர்ச்சி... (பக்கம் -15)

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 43

### க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி
(1) ண் (2) ங் (3) ன் (4) ம் (5) ந் (…….)

1.2 பின்வருவனவற்றுள் வருடொலி
(1) ம் (2) ஞ் (3) ந் (4) ர் (5) ன் (…….)

1.3 பின்வருவனவற்றுள் இகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) இரவு (2) விற்பனை (3) தின்பண்டம் (4) கிரி (5) சிறகு (…….)

1.4 பின்வருவனவற்றுள் பகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) பச்சை (2) வெம்பல் (3) பாடம் (4) பத்து (5) அப்பம் (…….)

1.5 பின்வருவனவற்றுள் ஒற்றளபெடை
(1) வண்ண்ணம் (2) அக்க்கா (3) வாழ்ழ்க்கை (4) வெட்ட்கம் (5) பார்ர்வை (…….)

1.6பின்வருவனவற்றுள் வேற்றுமைப் புணர்ச்சி அல்லாதது
(1) கல்லெறிந்தான் (2) தரைத்தோற்றம் (3) கண்ணீர்
(4) எனது மகன் (5) மகனே வா (…….)

1.7 பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
(1) படர்க்கை (2) முன்னிலை (3) முகம் (4) தன்மை (5) அழகு (…….)

1.8 அவன் அழகாகப் பூக்களைப் பறிக்கிறான். இதில் 'அழகாக' என்பது
(1) பெயரடை (2) எழுவாய் அடைமொழி (3) வினையடை
(4) செயப்படுபொருள் அடைமொழி (5) பெயரெச்சம் (…….)

1.9 பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை ஆகியவற்றைக் கொண்ட பகுபதம்
(1) பலவற்றை (2) நாட்டிற்கு (3) செய்தனன் (4) தோடம்பழம் (5) பிடித்தனன் (…….)

1.10 பின்வருவனவற்றுள் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர் கொண்ட வாக்கியம்
(1) அந்த நாளில் நாம் நடித்த நாடகங்களை நினைக்கிறேன்.
(2) தாய்சேய் நலன் பேணும் நிலையத்தை நாங்கள் பார்த்தோம்.
(3) க.பொ.த. (உ.த) பரீட்சையில் எங்களாலும் சித்தியடையமுடியும்.
(4) எங்களுக்கும் காலம் வரும்.
(5) பால்நிலவைக் கண்டு நான் பரவசமடைந்தேன். (…….)

1.11 அவன் தன்னைப் பற்றி யோசிக்கவில்லை. இங்கு 'தன்' என்பது
(1) உயர்திணைப் பெயர் (2) படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் (3) எழுவாய்
(4) அ∴றிணைப் பெயர் (5) படர்க்கைப் பெயர் (…….)

1.12 அங்கே யாரோ வருவது போல எனக்குத் தெரிகிறது. இங்கு 'யாரோ' என்பது
(1) ஆக்கப்பெயர் (2) முன்னிலைப் பெயர் (3) அ∴றிணைப் பெயர்
(4) அளவுப் பெயர் (5) மாற்றுப் பெயர் (…….)

1.13 பின்வருவனவற்றுள் சாரியை பெறும் வினாப்பெயர்
(1) எவன் (2) என்ன (3) யாரை (4) எவர்கள் (5) ஏன் (…….)

1.14 குறில்நிலை வினையடி, நெடிலாவதனால் உருவான ஆக்கப்பெயர்
(1) வாடி (2) நாடு (3) தேடு (4) கேடு (5) ஆடு (…….)

1.15 வினை + மதி ஸ்ரீ பெயர் என்னும் அமைப்பில் உருவான ஆக்கப்பெயர் அல்லாதது
(1) வெண்மதி (2) தருமதி (3) ஏற்றுமதி (4) கொடுமதி (5) வருமதி (…….)

1.16 பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் கொண்ட வாக்கியம்
(1) அவர்கள் சுண்டல் வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.
(2) பிரதான வீதிகளில் கால்நடைகளால் விபத்து ஏற்படுகிறது.
(3) நேரத்தோடு சாப்பிட்டமை நல்லதாய்ப் போய்விட்டது.
(4) அன்று காலையில் வந்தவள் யார்?
(5) அவர்கள் மிகவும் நல்லவர்கள். (…….)

1.17 "இந்த முறை வெல்லாவிட்டால் கப்பலேறும் மானம்" இதில் எழுவாய்
(1) இந்த (2) இந்த முறை (3) கப்பல் (4) மானம் (5) ஏறும் (…….)

1.18 பின்வருவனவற்றுள் பண்புத்தொகை
(1) தங்கக் காப்பு (2) இராப்பகல் (3) தண்ணீர் (4) கண்ணீர் (5) பொன்னன் (…….)

1.19 பின்வருவனவற்றுள் வினைத்தொகை
(1) விடுகதை (2) கொள்முதல் (3) அடிமாடு (4) பாய்மரம் (5) குடிநீர் (……..)

1.20 'வா' என்பதன் 'செய்ய' வினையெச்ச வாய்பாட்டு வடிவம்
(1) வந்து (2) வர 3) வந்த (4) வந்தால் (5) வந்தமாடு (…….)

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

3.குறைந்தது இரண்டு ஆட்சியான இயல்புகளைக் காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை = 5/8 x 640 = 400 தாவரங்கள்

### சோதனை இனம் கலப்பு (Test cross)


இது, அறியப்படாத பிறப்புரிமையமைப்புக்களைத் தீர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற முன்கருதலையுடைய ஒரு இனக்கலப்புச் செயன்முறை ஆகும். ஆட்சியுடைய இயல்பைக் காண்பிக்கும் தனியொரு அங்கியின் பிறப்புரிமையமைப்புக்கு இரட்டை ஆட்சியுடைய பிறப்புரிமையமைப்பு அல்லது இதரநுகத்துக்குரிய நிலை காரணமாக இருக்கலாம். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தோற்றவமைப்புக்கு அறியப்படாத பிறப்புரிமையமைப்பை உடைய அங்கியொன்றை, அதே இயல்புக்கு சமநுகமுடைய பின்னிடைவான நிலையைக் கொண்ட அதே இனத்தைச் சேர்ந்த வேறொரு அங்கியுடன் இனங்கலத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு கலப்புப்பிறப்பு இனங்கலத்தலின்போது மேற்கொள்ளப்படும் சோதனை இனம் கலப்பு ஒருகலப்புப்பிறப்பு சோதனை இனம் கலப்பு (monohybrid test cross) என அழைக்கப்படும். மாறாக, துவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனங்கலத்தலின்போது மேற்கொள்ளப்படும் சோதனை இனம் கலப்பு துவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனம் கலப்பு (Dihybrid test cross) என அழைக்கப்படும்.

### ஒருகலப்புப்பிறப்பு சோதனை இனம் கலப்பு (Monohybrid test cross)

ஒருகலப்புப்பிறப்பு சோதனை இனம் கலப்புக்கு ஒரு உதாரணத்தைக் கவனத்திற்கொள்வோம். இந்த உதாரணத்தில் தரப்பட்ட உயரமான பட்டாணித்தாவரங்களின் பிறப்புரிமையமைப்பை நாம் அறிய விழைகின்றோம். இதனைச் செய்வதற்கு நாம் உயரமான பட்டாணித் தாவரத்தை குறளான பட்டாணித்தாவரத்துடன் இனம் கலப்போம். குறளான தன்மை ஒரு பின்னிடைவான இயல்பாக உள்ளதால் அதன் பிறப்புரிமையமைப்பு tt ஆக இருக்கும்.
உயரமான பட்டாணித் தாவரங்கள் இரண்டு சாத்தியமான பிறப்புரிமைப்புக்களைக் கொண்டிருக்கலாம்.
1. TT
2. Tt

அறியப்படாத பட்டாணித்தாவரத்தின் பிறப்புரிமையமைப்பு TT யைக் கொண்டது எனக் கொள்வோம். TT மற்றும் tt க்கு இடையிலான இனக்கலப்பு பின்வரும் பெறுபேறைக்காட்டும்.



உரு 6.4. ஒரு ஒருகலப்புப்பிறப்பு சோதனை இனங்கலத்தலின் சாத்தியமான இரண்டு பெறுபேறுகள்

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

# கணிதம்

08. $5(2x+1)-1=14$

$5\times 2x+5\times 1-1=14$ (அடைப்புக் குறிக்குள் உள்ளவற்றை 5ஆல் பெருக்குக.)

$10x+5-1=14$

$10x+4=14$

$10x+4-4=14-4$ (இருபக்கங்களிலிருந்தும் 4ஐக் கழிக்குக.)

$10x=10$

$\frac{10x}{10}=\frac{10}{10}$ (இருபக்கங்களையும் 10ஆல் வகுக்குக)

$x=1$

09. $\frac{3(x-1)}{2}+2=5$

$\frac{3(x-1)}{2}+2-2=5-2$ (இருபக்கங்களிலிருந்தும் 2ஐக் கழிக்குக.)

$\frac{3(x-1)}{2}=3$

$\frac{3(x-1)}{2}\times 2=3\times 2$ (இருபக்கங்களையும் 2ஆல் பெருக்குக.)

$3(x-1)=6$

$\frac{3}{3}(x-1)=\frac{6}{3}$ (இருபக்கங்களையும் 3ஆல் வகுக்குக)

$x-1=2$

$x-1+1=2+1$ (இருபக்கங்களிலிருந்தும் 1ஐக் கூட்டுக)

$x=3$

10. $7+5\frac{(2-3x)}{11}=12$

$7-7+5\frac{(2-3x)}{11}=12-7$ (இருபக்கங்களிலிருந்தும் 7ஐக் கழிக்குக.)

$\frac{5(2-3x)}{11}=5$

$\frac{5(2-3x)}{11}\times 11=5\times 11$ (இருபக்கங்களையும் 11ஆல் பெருக்குக.)

$5(2-3x)=55$

$\frac{5}{5}(2-3x)=\frac{55}{5}$ (இருபக்கங்களையும் 5ஆல் வகுக்குக)

$2-3x=11$

$2-2-3x=11-2$ (இருபக்கங்களிலிருந்தும் 2ஐக் கழிக்குக.)


$-3x=9$

$\frac{-3x}{-3}=\frac{9}{-3}$ (இருபக்கங்களையும் -3ஆல் வகுக்குக)

$x=-3$

தொடர்ச்சி...

## வரலாற்றில் காணாமலாக்கப்பட்ட....



அருகில் கருதப்பாட்டார்கள் என்பதெல்லாம் இன்னொரு தனிக்கதை.

காலப்போக்கில் இந்த உப சாதிக் குழுமங்களின் அடையாளங்கள் அழிந்துபோனாலும் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்த இலங்கை மக்கள் சாதிகளாக எப்படி பிளவுண்டு இருந்திருக்கிறார்கள் என்பதை அறிவதற்கான முக்கிய குறிப்புகள் இவை.

இலங்கையின் சாதிகளைப் பற்றி ஆராய்ந்தவர்கள் பலர் வெலென்டினின் குறிப்புகளைத் தவறவிட்டிருக்கிறார்கள். சாதிகள் பற்றிய அவரின் குறிப்புகளை பயன்படுத்தியவர்களில் "Caste in Sri Lanka - From Ancient Times to the Present Day" என்கிற நூலை எழுதிய ஆசிப் ஹுசைன் (Asiff Hussein) கவனிக்கத்தக்கவர்.
முதல் இரண்டு அத்தியாயங்களைத் தவிர எஞ்சிய அத்தியாயங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.புவியியல் நிலப்பரப்பு, இலங்கையின் இனப்பரம்பல், மக்களின் பண்பாட்டு அம்சம், மரபுகள், மொழி

2.இலங்கையின் வரலாற்றுச் சுருக்கமும், 1724 வரையான இலங்கையின் காலனித்துவ கால வரலாற்றுக் குறிப்புகளும், (4-15 வது அத்தியாயம் வரை)

3.இறுதி இரண்டு அத்தியாயங்களும் இலங்கையின் அன்று நிலவிய மதங்கள் பற்றியது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, போன்றவை பற்றி.

இலங்கை பற்றிய 31 கோட்டோவியங்களும், இலங்கையின் வரைபடமும் இந்த நூலில் உள்ளடக்கம். வெலென்டினின் "பழைய புதிய கிழக்கிந்தியா" நூலைத் தவிர மேலும் சில முக்கிய ஆய்வு நூல்களையும் வெளியிட்டிருந்தார். கடற் தாவரங்கள் விலங்குகள் குறித்த ஆரின் நூல் அவர் இறந்ததன் பின்னர் 1754இல் ஆம்ஸ்டர்டாமில் வெளியானது. வேறு பல மொழிகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டது. அவரின் நூல் ஆசியாவின் முக்கிய கடல்வழிப் போக்குவரத்தை அறிந்துகொள்வதற்கான அடிப்படையான மூல நூலாக பல்லாண்டுகாலம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அது ஒரு முக்கியமான கலைக்களஞ்சியம் என்கிறார் மொத்தாவு. அது போல அன்றைய டச்சுக் காலனித்துவத்துக்கு ஆதாரமாக இன்றும் ஒல்லாந்தர்களின் தேசியவாத பெருமிதத்துக்கு வெலென்டினின் பணிகளைக் கொண்டாடி வருகின்றனர்.

இலங்கையைப் பற்றியே இவ்வளவு என்றால் ஏனைய நாடுகள் பற்றி அவர் எழுதியிருக்கும் விபரங்கள் கூட வியப்பைத் தரும் வரலாற்றுப் பதிவுகள். வெலென்டின் இலங்கையின் வரலாற்றின் ஒரு முக்கிய காலப்பகுதியை கட்டுடைத்திருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக சம்பந்தப்பட்ட இலங்கையர்களுக்கு இன்னமும் அது முழுமையாக போய் சேரவில்லை. அவரின் பதிவுகள் பல வெளிச்சங்களை தர வல்லவை.
தமிழில் மொழிபெயர்க்க முன்மொழியக் கூடிய வரலாற்று நூல்களில் வெலென்டினின் "பழைய புதிய கிழக்கிந்தியா" முக்கியமான ஒன்று.

தொடர்ச்சி...

## ஜப்பானில் அமிலத்தாக்குதல்......

அவசரப்பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உள்ளூர் பத்திரிகை ஒன்றின் தகவலின்படி கியோட்டோ அனிமேஷன் ஸ்டூடியோவிற்குள் நுழைந்த, ஒருவர் அடையாளம் தெரியாத திரவத்தை வீசி தீயை ஏற்படுத்தியுள்ளார்.
மேலும், இந்தச் சம்பவத்தில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காயத்துடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
காலை சுமார் 10.30 அளவில் "தீ" இந்த ஸ்டூடியோவின் 3 மாடிகளிலும் பரவியது.

தொடர்ச்சி...

## ஆலயங்களில் மிருக பலியைத்.......

மேன்முறையீடு செய்யப்பட்டது.

மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், மேன்முறையீட்டாளரான கவுணவத்தை நரசிம்ம வைரவர் ஆலய நிர்வாகத்துக்கு வழக்குச் செலவை வழங்குமாறும் உத்தரவிட்டது. யாழ்ப்பாணம் கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயம் சார்பில் மேன்முறையீட்டு மனுவை மூத்த சட்டத்தரணி கே.வி.எஸ். கணேசராஜா, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

மனுவின் எதிர்மனுதாரர்களாக சட்ட மா அதிபர், சைவ மகா சபையினர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.இந்த மனு மீதான விவாதம், சமர்ப்பணங்கள் நிறைவடைந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு ஜுலை 18ஆம் திகதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி...

## கன்னியா விவகாரம்..........

திணைக்களம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதேவேளை, முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த புராதனச் சின்னங்கள் இருக்கவில்லையென தொல்பொருள் ஆய்வுத் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் மண்டாவெல கூட்டத்தில் ஒப்புக் கொண்டதாகவும் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.
மலையகத்தில் கேட்லேஜ் தோட்டத்தில் உள்ள முனி கோயிலில் பௌத்த பிக்கு ஒருவர் பௌத்த கொடியை ஏற்றியமை தவறானதெனவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதியை தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு முயல்வதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



## மட்டக்களப்பு-புலையவெளி பதியாலும்

# பேரருள்மிகு அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்

## 05வது வருடாந்த உற்சவ பெருவிழா - 2019

**ஆரம்பம்**
**17.07.2019**
**புதன்கிழமை**

[illegible]

**நிறைவு**
**21.07.2019**
**ஞாயிற்றுக்கிழமை**

### சைவ மெய் அடியார்களே!

[illegible]

### கிரியா கால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 15.07.2019 | திங்கட்கிழமை | மாலை 4.00 மணியளவில் திருக்கனிகள் கனிய வைக்கும் நிகழ்வு இடம்பெறும். |
| 16.07.2019 | செவ்வாய்க்கிழமை | மாலை 5.00 மணிமுதல் வாஸ்து சாந்தி அதனைத்தொடர்ந்து விநாயகர் வழிபாடு நடைபெறும். உபயம்: செல்வம் கண்ணன் குடும்பம் |
| 17.07.2019 | புதன்கிழமை | மாலை 5.00 மணியளவில் அம்பாளை எழுந்தருளல் பண்ணுதல், திருக்கனி சுமத்தல், போன்ற நிகழ்வுடன் அம்பாள் ஆலயம் வந்தடைந்து பின் மண்டபம் காவல் பண்ணுதல் நிகழ்வும் நடைபெறும். உபயம்: புலையவெளி வாழ் மக்கள் |
| 18.08.2019 | வியாழக்கிழமை | 1ம் பூசை காலை விஷேட பூசைகளும் அதனைத்தொடர்ந்து தேவாதிகளால் அருள்வாக்கு சொல்லுதல் நிகழ்வும் நடைபெறும் உபயம்: புலையவெளி வாழ் மக்கள் 2ம் பூசை மாலை விஷேட பூசைகளும் அதனைத்தொடர்ந்து தேவாதிகளால் அருள்வாக்கு சொல்லுதல் நிகழ்வும் நடைபெறும் உபயம்: தங்கராசா குடும்பம் |
| 19.08.2019 | வெள்ளிக்கிழமை | 3ம் பூசை காலை விஷேட பூசைகளும் அதனைத்தொடர்ந்து தேவாதிகளால் அருள்வாக்கு சொல்லுதல் நிகழ்வும் நடைபெறும் 4ம் பூசை மாலை அதி விஷேட பூசைகளும் அதனைத்தொடர்ந்து எல்லைக்காவல் (வல்லி வட்டாரம்) பண்ணுதல் நிகழ்வும் இடம்பெறும் உபயம்: விருக்குமார் வினோதன் குடும்பம் |
| 20.08.2019 | சனிக்கிழமை | 5ம் நாள் காலை விஷேட பூசைகளும் அதனைத்தொடர்ந்து வீர கம்பம் வெட்டுதல் நிகழ்வும் இடம்பெறும் உபயம்: இளந்தளிர் விளையாட்டுக்கழகம் - புலையவெளி 6ம் பூசை மாலை அதிவிஷேட பூசைகளுடன் அருள்புனைந்தல் தீ மிதிக்க புனித அக்கினி வளர்த்தல் நிகழ்வும் நடைபெறும். உபயம்: தலக்சுமிகாந்தன், க.சுரேஸ்குமார், க.ரகு, க.பிரதாஸ் குடும்பங்கள் |
| 21.07.2019 | ஞாயிற்றுக்கிழமை | 7ம் பூசை : அதி காலை 12.00 மணியளவில் விநாயகர்பாளை எழுந்தருளல் தொடர்ந்து கன்னிமார் காத்தான்மார்களுக்கு தண்ணீர்சோற்றும் பள்ளயம் வழங்கும் நிகழ்வும் பின் தீ மிதிக்கும் புண்ணிய நிகழ்வும் பின் அன்னையின் காவியம், வாழியும் பாடி திக்க உற்சவத்தோடு நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவு பெறும் உபயம் புலையவெளி வாழ் பொது மக்கள் |

**புலையவெளியைச் சேர்ந்த ராமப்பிள்ளை ஜெயானந்தும் குடும்பத்தினரால் 21.07.2019 அன்று ஆலய முன்றலில் அன்னதானம் வழங்கப்படும்**

**ஆலய உற்சவ குருக்கள்**
**சிவஸ்ரீ தர்ம உருத்திரமூர்த்தி தனு ஸ்ரீ சர்மா அவர்களாலும்**
**தேச சக்தி மாந்ரீக கிரியா பூசனம் கனேசமூர்த்தி புருசோத்மன் அவர்களாலும் நடைபெறும்.**

**ஆலய குரு சிவ ஸ்ரீ ஜெயக்குமார் ஐயா**

# தீ மிதிப்பு 21.07.2019

**காலை 5.30 மணிமுதல் இடம்பெறும்**

பிரசுரம் அன்பளிப்பு:
நாகராசா ஆனந்தராசா

**அனைவரும் வருக**
**அன்னையின் அருளைப்பெறுக!**

இவ்வண்ணம், என்றும் இறைபணியில்
அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய அறங்காவலர் சபை
பதுளை வீதி, புலைய வெளி, முதிரையடி ஏற்றம் செங்கலடி

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa